Registered as a News Paper பக்கங்கள் 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 30 (14 - 08 - 1992) வெள்ளிக்கிழமை ஓசை 178

## சான்றிதழ்கள் வழங்க காகிதாதிகள் தட்டுப்பாடு

- ஆதர் வெதமுல்ல

1968 ஆம் ஆண்டுச் குப் பின்னர் க.பொ.த. சாதாரண, உயர்தரப் பரீட்சைகளில் தோற்றிய ஒருகோடி ஐந்து லட்சம் பரீட்சார்த்திகளுக்கு இதுவரை பரீட்சைத் திணைக்களம் சான்றிதழ்களை வழங்கவில்லை என தெரியவந்துள்ளது. ஒவ்வொரு வருடமும் பரீட்சைகளுக்கு பல லட்சக்கணக்கான மாணவ மாணவியர் தோற்றுகின்றனர். அவர்களின் பெறுபேறுகள் பற்றி மாத்திரமே (8 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின் தடையை எதிர்த்து விடுதலைப் புலிகள் ஆட்சேப மனு

## தடை உத்தரவு ஒத்திவைப்பு

[லண்டன்]

விடுதலைப் புலிகளை தடை செய்யும் இந்திய அரசின் பிரகடனத்தை ஆட்சேபித்து. விடுதலைப் புலிகள் இயக்கம் டில்லி உயர் நீதி மன்றத்தில் மனுச் செய்துள்ளது. இதை அடுத்து, இன்று நடைமுறைக்கு வரவிருந்த புலிகளை தடை செய்யும் இந்திய அரசின் பிரகடனம் நடைமுறைப்படுத்தப்படுவதை டில்லி உயர் நீதி மன்ற நீதிபதி ரி. என். ராவ் ஒத்திவைத்துள்ளார்.

டில்லியில் அமைந்திருக்கும் சட்ட விரோதமான நடவடிக்கைகளைத் தடை செய்யும் நீதி மனறத்தின் முன் விடுதலைப் புலிகள் சர்வதேசச் செயலகத்தின் சார்பாக திரு. லோரன்ஸ் திலகர் சார்பில் மனு ஒன்று தாக்கல் செய்யப் பட்டுள்ளது. இந்த மனுவை கௌதம் என்பவர் நீதிபதி முன் தாக்கல் செய்தார். அவர் தன்னை விடுதலைப் புலிகள் அமைப்பின் அடுத்துள்ள நண்பர் என தெரிவித்தார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீது தடை விதிக்க இந்தியாவிற்கு அதிகாரமில்லை

(லண்டன்)

புலிகள் அமைப்பை இந்தியா தடை செய்திருப்பதற்கு இந்தியாவுக்குச் சட்ட பூர்வமாக அதிகாரம் இல்லை எனவும்,

புலிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடை செல்லாது என்பது மட்டுமல்ல, அதை இந்தியாவினால் சட்டபூர்வமாகச் செயற்படுத்தமுடியாது என்றும், புலிகளின் அமைப்பு இந்தியாவில் உள்ள அமைப்பு அல்ல என்றும்,

இந்தியா பிரகடனப்படுத்திய தடை சட்டபூர்வமானதா என்பதை இறுதியாக முடிவு செய்ய டில்லியில் அமைக்கப் பட்டுள்ள சட்டவிரோதமான இயக்கங்களைத்தடைசெய்யும் நீதிமன்றத்தில் புலிகள் சமர்ப்பித்த மனுவில் தெரிவித்துள்ளனர்.

புலிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் இந்தியாவின் தடை, தடா என்னும் கடுமையான சட்டத்தின்கீழ் அல்ல என்றும், சட்டவிரோத நடவடிக்கைத் தடைச் சட்டத்தின்கீழ தடை செய்யப் பட்டிருப்பதாகவும் சட்ட நிபுணர்கள் கருதுகின்றனர்.

இந்த நீதிமன்றம் புலிகளின் மீதான தடையை விலக்கிக் கொள்ளலாம் என்று அரசுக்கு ஆலோசனை கூறும் அதிகாரம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வடபிராந்திய தளபதியாக ஜெரிசில்வா நியமனம்

(கொழும்பு)

வட பிராந்தியத்திற்கான சிறிலங்காவின் புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா நியமிக்கப்பட்டுள்ளார் என கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்தார்.

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் மறைவை அடுத்து ஜெரிசில்வா நியமிக்கப்பட்டுள்ளார். இதேபோல யாழ். மாவட்டத் தளபதியாக பிரிகேடியர் ரொக்மன் டி. எவ் தளுவத்தாவும்,

( 8ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்த தமிழர் தொகை 35 ஆக அதிகரிப்பு

மட்டக்களப்பு மாவட்டம் மயிலந்தனை என்னும் இடத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை 35 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த ஞாயிறன்று இடம் பெற்ற இச் சம்பவத்தில் உயிரிழந்த ஒன்பது தமிழர்களின் உடல்கள் நேற்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் படுகொலைகளை சிறிலங்கா இராணுவத்தினரே செய்ததாக நேரில் கண்ட பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். மயிலந்தனைக்கு அருகிலுள்ள இராணுவ முகாமிலிருந்து சாதாரண உடையணிந்து வந்த இராணுவத்தினரே இப்படு கொலைகளைச் செய்ததாக நேரில் பார்த்த மக்கள் மட்டக்களப்பு நீதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் கொலைகளை முஸ்லிம் குழுக்கள் செய்ததாக முதலில் சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிங்களவரிடையே வளரும் எதிர்ப்பு: பிரேமா எதிர்கொள்ளும் நெருக்கடி

ஊர்காவற்றுறையில் கடந்த சனிக்கிழமை கொல்லப்பட்ட இராணுவ அதிகாரிகளான லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, விஜய விமலரட்ணா ஆகியோரின் இறுதிச் சடங்குகளின் போது அமைச்சர் உட்பட பல பிரமுகர்கள் தாக்கப்பட்டது சிறிலங்கா அரசுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது மக்கள் தமது அதிருப்தியை வெளிப்படையாகவே காட்டியுள்ளமை பெரும் இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளதாக பி.பி.சி தனது செய்தி ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் தெரிவித்தது மேலும் அச் செய்தியில்-

1983 ஆம் ஆண்டு சிங்கள இராணுவ வீரர்கள் பதின்மூன்று பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து தலைநகர் கொழும்பில் தமிழ் மக்களுக்கு எதிராக வன்முறைகள் வெடித்தன.

( 8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலால் ராணுவ முகாம் மூடப்பட்டது

(வவுனியா)

விடுதலைப்புலிகளின் சமீபத்திய தாக்குதலையடுத்து சிறிலங்கா இராணுவத்தின் இறப்பமடு முகாம் மூடப்பட்டுவிட்டது.

இந்த முகாம் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் அருகில் உள்ள கச்சைக்கொடி இராணுவ முகாமில் நிலைகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் வவுனியா நகரைச் சுற்றி இராணுவ காவல் அரண்களில் இராணுவத்தி

( 7ஆம் பக்கம் பார்க்க)

மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ணா இறுதிக் கிரியையில் கலவரம்:

## அமைச்சர்கள், பொலிஸ் உட்பட நூற்றுக்கணக்கில் காயம்

மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ணாவின் இறுதிக் கிரியைகளின்போது கொழும்பில் நடைபெற்ற தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான பொது மக்களும் அறுபது பொலிசாரும் காயமடைந்ததுடன் சில அமைச்சர்களும் படுகாயமடைந்து கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை தீவகப் பகுதி அராலிச் சந்தியில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கி உயிரிழந்த சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரிகளின் மரணச்சடங்குகள் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற போதே அரச அதிகாரிகள் மீது பொதுமக்கள் தாக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கலவரத்தை தூண்டும் பிரசுரங்கள் கொழும்பு பல்கலையில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஊர்காவற்றுறை அராலித்துறையில் விடுதலைப்புலிகளால் வைக்கட்பட்ட அழுக்க கண்ணி வெடியில் உயிரிழந்த சிறிலங்கா பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் மரணத்தையடுத்து மக்களைத் தூண்டும் விதத்தில் எழுதப்பட்ட இராணுவ முத்திரை பொறிக்கப் பட்ட துண்டுப் பிரசுரங்கள் கொண்ட தொகுதி ஒன்றை கொழும்பு பல்கலைக்கழக வளாகத்திலிருந்து பொலிசார் கண்டெடுத்துள்ளனர் என்று கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப் பிரசுரங்களின்பின்னணியில் செயற்பட்டவர்கள் பற்றிக் கண்டறியும் முகமாக பொலிசார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தரையின் உறைதான்
தரம் மிகுந்த தாவரங்கள்

## வரி விளம்பரம்

### வாங்கலாம் விற்கலாம்

பாவித்த தரமான கடிகாரங்கள் மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். உங்கள் மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும். மணிக்கூடுகள் றேடியோக்கள் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம். மணிக்கூடுகளுக்கான சகல பற்றரிகளும் எம்மிடம் உண்டு. டில்கா வாச் வேக்ஸ் 284. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (2993)

### விற்பனைக்கு

வீடியோ கமராவுக்குரிய ஸ்ரான்டுகள் இரண்டு, லென்சுகள் நான்கு, Rechargable Batteries இரண்டு நஷனல் கசற் றேடியோக்கள், Rs. 3000/- ற்குட்பட்டவை. Casio Data Bank R. G Rs. 6750/- சீக்கோ ஒட்டோமற்றிக் கடிகாரங்கள், இருபாலருக்குமுரியது. பெறுமதி Rs. 3000/- ஏறத்தாழ Rs. 1750/- க்கு பெற்றுக்கொள்ளலாம். டில்கா வாச் வேக்ஸ், யாழ்ப்பாணம். (2994)

### தேவை

வேப்பம் விதை தேவை. அண்ணா கோப்பி கடைகளிலும் கொடுத்துப் பணம் பெற்றுக்கொள்ளலாம். -மில்க்வைற் யாழ்ப்பாணம். [சி/4878]

### புதிய மீரா நாவல்

1992 இல் வெளிவந்தவை ''ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்'' (வாமதேவன்) ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்'' (சிதம்பர திருச்செந்திநாதன்) ''விண்ணில் அல்ல விடிவெள்ளி'' (தாமரைச் செல்வி) யாழ்ப்பாணம், சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது. (3003)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### மேஜர் சொனி

(சிவஞானசுந்தரம் அசோகன்)

வல்வை நகரில் ஜனனம்: 28 - 11 - 1967
ஆனையிறவில் வீரச்சாவு: 27 - 07 - 1991

திதி : 14 - 08 - 1992

வல்வை மண்ணில் பிறந்து
வரலாறானாய் நேற்று
வாழ்வைத் தமிழுக் கீந்து
வழங்கினை எமக்கு வாழ்வு.
ஆண்டொன்று ஓடி மறைந்தது
ஆற்றல் வீரன் நினைவு நாள் வந்தது
வீண் பகைவர் வீழ்வது கண்டு
நீ விண்ணிற் சிரிப்பது கேட்குது.

இன்று 14-08-1992 வெள்ளிக்கிழமை நடைபெறும் அபரபக்ஷத்து பிரதமை திதி நினைவஞ்சலியில் கலந்து கொள்ளுமாறு போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் யாவரையும் அழைக்கின்றோம.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (3013) - குடும்பத்தினர்

மத்திய மாகாணத்தில்

## மழை என அறிவித்தால் கொழும்பில் மழை பெய்கிறது

– சுதந்திரக் கட்சி எம். பி. சாடல்

(கொழும்பு)

கொழும்பு வானிலை அவதான நிலையம் மத்திய மாகாணத்தில் மழைபெய்யும் என்று வானிலை அறிக்கை வெளியிட்டால் அந்த மழை கொழும்பில் பெய்யும் என்று கம்பஹா மாவட்ட சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் றெஜி ரணதுங்கா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வறுமைப்பட்ட நாடான பங்களாதேஷ் வானிலைத் திணைக்களம் கூட, அந்நாட்டில் இயற்கையால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களைக் கணித்து முன்கூட்டியே சரியான அறிக்கைகளை வெளியிடுகிறது என்றார் அவர்.

## நினைவு கூருகின்றோம்... 1992 - 08 - 14

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில், தங்காலையில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 6- தமிழ் இளைஞர்கள்.

1988ஆம் ஆண்டு மட்டக்களப்பு கழுதாவளைப் பகுதியில் தேசவிரோதிகளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட -

**குருசாமி** (கா.இரத்தினசிங்கம் கழுதாவளை, மட்டக்களப்பு)

**வினோபா** (க. ஜெகதீஸ்வரன் பிரதான வீதி, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு)

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பு பளுகாமம் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சுப்பிரமணியன்** (சுப்பிரமணியம் கீதாகரன் - ஆரையம்பதி, மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - 38 ஆம் கிராமம் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**நந்தன்** (சின்னத்தம்பி நந்தகுமார் 38 ஆம் கிராமம் மட்டக்களப்பு)

இதேபகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கண்ணன்** (பெரியபோரதீவு, மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - திகிலி வெட்டைப் பகுதியில், இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**கமல்** (தர்மலிங்கம் சோமலிங்கம் - சந்திவெளி, மட்டக்களப்பு)

திருக்கோணமலை மேன்காமம் பகுதியில், இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் வீரச்சாவெய்திய -

**சுடடா** (ப.சிறிஸ்கந்தராசா-கங்குவேலிதிருக்கோணமலை)

பருத்தித்துறை வியாபாரி மூலைப்பகுதியில், இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இன்பருட்டியைச் சேர்ந்த நடன ஆசிரியர் - யாக்கரையில் இந்தியப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்.

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - தாந்தா மலைப் பகுதியில், சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**அன்று** (அக்கரைப்பற்று, அம்பாறை)

**செல்வா** (வேல்முருகு தவராசா - களுமுந்தான்வெளி, மட்டக்களப்பு)

**துஷ்யந்தன்** (கரவெட்டி, மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கரடியனாறு - மரப்பாலம், இராஜபுரம், கொடுவாமடு மற்றும் பகுதிகளில் சிறிலங்கா ராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது படுகொலை செய்யப்பட்ட 5-தமிழர்கள் - கரடியனாறு எல்லை நகர்ப் பகுதியில் இனந்தெரியாத குழுவொன்றினால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட தமிழ்ப்பெண் - போராவெளி ஈச்சந்தீவுப் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 15 தமிழர்கள் - முஸ்லிம் காடையர்களினால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட ஏறாவூரைச் சேர்ந்த தமிழ்ப்பெண்.

1991ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**வின்சன்** (முத்துராசா சுரேஸ்குமார் - புலமோட்டை திருக்கோணமலை)

ஆனையிறவில், சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சாப்தீன்** (சரவணமுத்து ராஜேந்திரன் - மருதங்குளம் புத்துவெட்டுவான், கிளிநொச்சி)

அம்பாறை சவளக்கடைச் சந்திப் பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது சிறிலங்கா காவல் துறையினர் மற்றும் முஸ்லிம் காடையர்களினால் கடத்திச் செல்லப்பட்டு மத்திய முகாம் பகுதியிலுள்ள பிள்ளையார் கோயிலடி மற்றும் 4-ம் பகுதியிலுள்ள சுடுகாடு ஆகிய இடங்களில் வைத்து கூரிய ஆயுதங்களால் தாக்கி படுகொலை செய்யப்பட்டும்- கொல்லப்பட்ட பின் எரிக்கப்பட்டும் அழிக்கப்பட்ட 19 தமிழ் விவசாயிகள்.

மட்டக்களப்பு 13-ம் கிராமப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட 16-ம் கிராமத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/4885]

## 1 ஆம் ஆண்டில் அஞ்சலிப் பூக்களை அள்ளி வீசுகிறோம்



27 - 07 - 1991 அன்று ஆனையிறவில் நடைபெற்ற நேரடிமோதலில் வீரச்சாவடைந்த

### வீரவேங்கை டட்லியா

(தேவசிகாமணி வரலெட்சுமி)
(வல்வெட்டித்துறை)

வீரஜனனம் : 22 - 02 - 1971
வீரச்சாவு : 27 - 07 - 1991

ஒரு வருடம் உருண்டதம்மா ஒரு கோடி ஜென்மமிது
வண்ணமலர்ச் சோலையிலே வந்துதித்த வெண்ணிலவே
பாசமெனும்பூங்கயிற்றில் எமையெல்லாம் நீபிணைத்தாய்
விடுதலையே பெரிது என்று வீறுகொண்டு நீ எழுந்தாய்
தமிழனுக்கோர் மண் வேண்டும் தாயகமாய் என நினைத்து
தாய் மடியை உதறி நீ விடிவெள்ளி ஆனாயோ
விண்ணுலவும் தாரகைகளும் தலைவியவள் வெண்ணிலவும்
பக்கமுனை வைத்தனரோ பதறிநாம் நின்றிடவே
அன்புநெறி பொங்கிடவே அறிவொளி வீசிடும்
நின்னுருவை நாம் இங்கே இளைய துர்க்கா என
வணங்குகின்றோம்.



இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது அஞ்சலிகளைத் செலுத்துகிறோம்.

14 - 08 - 1992 இன்று அவரது இல்லத்தில் நடைபெறும் திதியில் போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நின் பிரிவால் வாடும்
அம்மா, அக்காக்கள் அண்ணா, அத்தான்மார், அண்ணி, பெறாமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்

'ரூபவாசம்'
சடையாண்டி கோவில் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. (2980)




## மேஜர் வீமன்

தென் ஆசியாவின் வரலாற்றுப் போக்கை மாற்றியதில் மணலாற்று மண்ணுக்கு தனியிடம் உண்டு. இந்தியப் படையுடன் இங்கு நடந்த போர்கள் பாரம்பரிய யுத்த முறைகளையெல்லாம் கேள்விக்குரியதாக்கிற்று. இந்திய இராணுவத்தில் சிறப்பு மிக்கதாகக் கருதப்பட்ட படைப்பிரிவுகளெல்லாம் தமது பெருமையை இழந்தன. இங்கு நடந்த வியப்பூட்டும் அனுபவங்களை இந்திய இராணுவத் தளபதிகள் நூல் வடிவில் வெளியிடுகின்றனர். மற்றும் பல வரலாற்று ஆய்வாளர்கள் இதனை ஆய்வுசெய்து கொண்டிருக்கின்றனர். 'அமைதிப் படையில் கடமையாற்றி உயிரிழந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்குவேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும்' என்று இந்திய அரசு உத்தரவிடும் அளவுக்கு இந்தியப்படையின் இழப்பு இருந்தது.

இத்தகைய பெருமை மிக்க போரில் கலந்து கொண்ட ஒரு அணியை வழிநடத்தியவன்தான் வீமன். இவன் மன்னார் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவன். அங்கேயே பயிற்சியும் பெற்றவன். சொல்லப்படும் விடயத்தை இலகுவாகப் புரிந்து கொள்பவன். யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்குஎதிராக மேற்கொள்ளப்பட்ட குரும்பசிட்டி மினி முகாம் தாக்குதல் உட்பட பல தாக்குதல்களில் கலநது கொண்டவன். யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினருடனான போர்களில் பங்கு பற்றிய பின் மணலாற்றில் இவனது பணி தொடர்ந்தது.

1988ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் நாள் மணலாற்றில் இந்தியப் படைப்பிரிவினருடனான போர் ஆரம்பித்தது. காலை 5.15 க்கு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சண்டையில் பிற்பகல் 4-00 மணிவரை இந்தச் சண்டையில் கலந்து கொண்ட எவருமே அந்த இடத்தை விட்டு விலகவேயில்லை. வேறொரு முகாமில் இருந்த வீமன் சண்டை தொடங்கிய பத்து நிமிடத்துக்குள் ஜி. 3 துப்பாக்கியுடன் அங்கு நின்றான். அவனைப்பொறுத்தவரைசண்டை செய்வதற்கு இது நல்ல சந்தர்ப்பம். அதனால் அவன் மகிழ்ச்சியுடன் கத்திக் கத்திச் சண்டை போட்டான். அன்றிலிருந்து இந்தியப்படை இந்த மண்ணைவிட்டுப் போகும் வரை அவனது இந்தச் சுபாபம் மாறவில்லை.

அந்த இடைக்காலத்தில் மணலாற்று மண்ணில் நடந்த அனுபவங்கள் மறக்க முடியாதவை. ஒரு காலத்தில் உப்புக்குக் கூடத் தட்டுப்பாடிருந்தது. காயப்படுவோருக்கு வைத்தியம் செய்வதற்குரிய சூழ்நிலை இல்லை. ஒவ்வொரு போராளியும் தனது நெருங்கிய நண்பர்களை இழந்திருந்தனர். ஆனாலும் எந்த ஒரு இக்கட்டான சூழ்நிலையாலும் இவனது கலகலப்பான போக்கைமாற்றமுடியவில்லை

எந்த நேரமும் இந்தியப் படை வரலாம் என்பதால் உணவைச் சேமிப்பதில் வெகு அவதானமாக இருக்க வேண்டியிருந்தது. அவற்றை உருமறைப்புச் செய்வதில் மரங்கள் கூட பெரும் பங்கு வகித்தன. (இந்தியாவின் சுதந்திர தினத்தையொட்டி இந்திய வானொலியில் ஒலிபரப்பப்பட்ட கவியரங்கொன்றில் வன்னிக்காட்டு மரங்கள் கூட காட்டிக் கொடுக்காது என்று குறிப்பிடுமளவுக்கு எமது மண் உயர்ந்து நின்றது.) ஒரு நாள் இவன் மரத்தில் சிறாம்பிகட்டி உணவைச் சேமிக்கும் போது கையை விட்டு விட்டு நிற்கிறேன் பார் என்று தனது நண்பனிடம் கூறிய போது மரத்திலிருந்து தவறி வீழ்ந்



தான் அதனால் படுக்கையிலேயே கிடக்க வேண்டிய நிலை. முற்றுகையென்றால் இவனையும் படுக்கையுடன் கொண்டுபோக வேண்டும். அந்த நிலையிலும் இவனது கலகலப்பு மாறவில்லை. அதுதான் அவனது தனித்துவம்.

குணமடைந்து மீண்டும் களத்திற்கு திரும்பினான். இளைய தலைமுறைப் போராளிகளை வழிநடத்தினான் திட்டமிட்டு செயலாற்றுவதில் இவனுக்கு எவ்வளவு திறமை இருந்ததோ அதேயளவுக்கு ஒரு போராளியின் மனநிலை அறிந்து செயற்படும் ஆற்றலும் இருந்தது. போராளிகளின்இன்ப துன்பத்தில் பங்கு கொள்வான். மீண்டும் அவர்களைத் தட்டிக்கொடுத்து புதுத் தெம்புடன் போராட வைப்பான். பொதுவாக இவனது முகாம் எப்போதும் மகிழ்ச்சியுடன் காணப்படும். இந்திய ஜவான்களெல்லாம் மரணபயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கையில் இவனது முகாமில் அடிக்கடி கலை நிகழ்ச்சிகள் நடக்கும். சனி, ஞாயிறு தினங்களில் விளையாட்டுக்கள் நடைபெறும். அந்த முகாமில் ஒரு மரை, ஒரு கரடி என்பவற்றுடன் ஒரு கருங் குரங்கையும் வளர்த்தான். அது ஒரு அபூர்வ ஆற்றல் மிக்கது. இவனைப் போலவே அது எல்லோரும் எப்போதும் சந்தோஷமாகவும் ஒற்றுமையாகவும் இருக்க வேண்டுமென்று விரும்பியது. யாருக்காவது ஒருவர் அடித்தால் அடிப்பவரை அது கையைப்பிடித்துத் தடுக்கும். இருவரும் ஒற்றுமையாக இருப்பதைக் கண்டாலேஅதற்குத் திருப்தியேற்படும். புதிதாக அந்த முகாமுக்கு வருபவர்கள் இதனைப்பார்த்து வியப்பார்கள்.

காட்டிற்குள் சென்றபுதிதில் திசையறிகருவி மூலம்காட்டை இனங்காண்பதில் வல்லவர்களாக இருந்தவர்களில் இவனும் ஒருவன். மரணத்தின் வாசலைச் சந்தித்தது போன்ற மிகப் பயங்கரமான முற்றுகைக்குள் எதிரிப்படையை மிகக்கிட்டிய தூரத்தில் இனங்கண்ட சம்பவங்களெல்லாம் ஏராளம். அப்போதெல்லாம் திசையறிகருவியின் துணையுடன் போராளிகளை பத்திரமான இடங்களுக்குக் கொண்டு சென்றிருக்கிறான்.

சிறிலங்காப் படையினருடனான போர் மீண்டும் ஆரம்பித்த பின் இவன் மாங்குளம் முகாம் மீதான முற்றுகை, காரைநகர் சிறிலங்காப் படையினருடனான மோதல், முந்திரிகைக்குளத்தில் சிறிலங்காப் படையினரின் மினி முகாம் மீதான தாக்குதல் போன்ற பல தாக்குதல்களில் பங்கேற்றான். அக் காலங்களில் இவனுடன் தாக்குதல்களில்கலந்து கொண்டோர் அதனை ஒரு இனிய நினைவுகளாகவே குறிப்பிடுகின்றனர். ஒவ்வொரு சம்பவத்திலும் இவன் நடந்து கொண்ட விதம் .. தங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்காக இவன் என்னென்ன விதத்தில் செயற்பட்டான் என்றெல்லாம் கதை கதையாகக் கூறுகின்றனர். நீந்தத்தெரியாதோரை கயிற்றில் கட்டி நீந்த விட்டது ... தமக்கு நண்டு சுட்டுக் கொடுத்தது .... இளநீர் பறித்துக் கொடுத்தது . பொதுவாக போர்ச் சூழலில் இருக்கும் உணர்வே இருக்கவில்லை அவர்களுக்கு அக்காலங்களில் ஒரு விடுமுறையைக் கழிக்கும் உணர்வே இருந்ததாகக் குறிப்பிடுகின்றனர். போர்க்களத்தில் எதிரியை காட்டிவிட்டு சுட்டு வீழ்த்தியதை நினைத்து வியக்கின்றனர்.

இவ்வளவு ஆற்றல் மிக்க போராளியை 15.7.91 இல் தொடங்கிய மணலாற்றுப் போரில் இழந்தோம். இப்போருக்குமுன்னதாக இராணுவத்தினரின் உளவுப் பிரிவொன்றுடன் மோதல் நிகழ்ந்தது. எனவே நடைபெறவிருக்கும் முற்றுகையைமுறியடிக்க திட்டங்கள்தீட்டினான் இவன். ''எங்கட காட்டுக்கை வந்திட்டுப் போறதெண்டா சேட்டையா? .. நல்ல அடி குடுத்துக்கலைக்க வேணும்'' என்று கூறிவிட்டு போராளிகளை தயார்படுத்தினான். மிகக் கடுமையான மோதல் நிகழ்ந்தது. தொடர்ச்சியான இந்த முற்றுகையில் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு செல்லும் வழியில் மறைந்திருந்த படையினர்தாக்கினர். அந்தப்போரின் போதேவீமன் இந்தமண்ணைப் பிரிந்தான். உயிர் பிரியும் வரை அந்த மோதலுக்குத் தலைமை தாங்கினான். இவனுடன் இன்னும் 12 போராளிகள் அச்சம்பவத்தில் வீரச்சாவடைந்தனர். இவனால் வழிநடத்தப்பட்ட போராளிகள் அந்தப் பாரிய முற்றுகையை முறியடித்தனர்.

இவனது உடல் இறுதி ஊர்வலத்துக்கு வந்த போது மில்லரின் நினைவு தினக் கூட்டத்தில் இவன் ஆற்றிய உரையே மக்களுக்கு நினைவுக்கு வந்தது. எங்கள் தாயக பூமியில் சிங்களக் குடியேற்றத்தை முறியடிக்க அணிதிரள வேண்டுமென்று உணர்வு பூர்வமாக ஆற்றியஉரை அது. போராளிகள் இவனது கலகலப்பு, திட்டமிடும் ஆற்றல் போன்றவற்றை நினைத்து புத்துணர்வு பெறுகின்றனர். அவர்களுக்கு இவன் கடைசியாகச் சொன்னது இன்று சொன்னது போல் இருக்கிறது.

''எங்கடை காட்டுக்கை வந்திட்டுப் போறதெண்டா சேட்டையா..... நல்ல அடி குடுத்துக் கலைக்க வேணும்''

— ஆம் இந்தக் காடுகள், கடல்கள், வயல்கள் எல்லாமே எங்களுடையவை. இதை இழக்கச் சம்மதிக்கமாட்டார்கள் அவர்கள்.

- இலக்கியன்

# நியூயோர்க் நகருக்கு அபாயம்; 2000 ஆண்டில் கடலில் மூழ்கலாம்

இரண்டாயிரம் வருடங்களில் அத்திலாந்திக் சமுத்திரத்தில் ஏற்படவுள்ளபூமிஅதிர்ச்சியினால், நியூயோர்க் நகரம்கடலில் மூழ்கும் அபாயம்தோன்றியுள்ளதாக விஞ்ஞான ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

புகழ்பெற்ற நகரங்களை கடல்கோள்கள் ஆட்கொள்வதும், பூமி அதிர்வால் நகரங்கள் சிதைவுறுவதும் காலத்திற்குக் காலம் நடைபெற்றுவரும்நிகழ்வுகளேயாகும். அகழ் பொருள் ஆய்வுகள் இத்தகைய நிகழ்வுகளுக்குச்சான்று பகர்கின்றன. இந்தியாவிலும் இலக்கிய வரலாற்றில் காவிரிப்பூம் பட்டினத்தை கடல் கோள்கள் ஆக்கிரமித்துள்ளமை சரித்திர நிகழ்வுகளாகும்.

இவ்வாறாகவே இரண்டாயிரம் ஆண்டுகளில் நியூயோர்க் நகரில் கடல்கோள் அபாயம் ஏற்படப்போகின்றது என்று மெச்சிக்கோ நகரைச் சேர்ந்த புகழ்பெற்ற விஞ்ஞான புவியியல் ஆராய்ச்சியாளரான டாக்டர் இஸபெல்லா மொக்டாஸிமா தெரிவித்துள்ளார். இவ் ஆய்வினை இவர் மேற்கொண்டும் செய்து வருகின்றார்.

சமுத்திர நீர்நிலை ஆய்வாளர் மிக்கேல் ஹாட்னிங் கூற்றுப்படி, சமுத்திரத்தில் ஏற்படப்போகும் பூமி அதிர்ச்சியினால் ஏறத்தாள நூறுமைல் வேகத்திலும்,

நூறு அடி உயரத்திலும் சமுத்திரத்தின் நீர் பாய்ந்து நகரைச் சிதைக்கும் ஆபத்து ஏற்படலாம் எனவும், தெரிவிக்கப்படுகின்றது.

சமுத்திரத்தில் ஏற்படும் பூமி அதிர்ச்சியினால், நகரம் நீர் கொள்வதுடன் நகர்வாழ் மக்களுக்கும் பேராபத்துக்கள் நிகழலாம். நீரின் வேகம் மணிக்கணக்கில் அல்லது சில நிமிடங்களிலேயே தாக்கவல்லன எனவும், இத்தகையதொரு ஆபத்து நிகழுமாகில் வரலாற்றில் இடம் பெறும் பேராபத்து எனவும் டாக்டர் ஹார்டிங் தெரிவிக்கின்றார்.

இராட்சதஅலைகள்தோன்றி இருபது மைல் விஸ்தீரணத்திற்குப் பரவலாம் எனவும் கணிக்கப்படுகின்றது. லோங் ஐயலண்ட் நோகோட் ஐயலண்ட், நியூ ஜெஸி போன்ற இடங்களுக்கு இந்த ஆபத்து தொடரும் வாய்ப்புக்கள் உண்டு நியூயோர்க் நகருக்கு அழிவு ஏற்படும்பட்சத்தில், தற்பொழுது இருபது மைல்களுக்கு அப்பால் நீரால்சூழப்பட்டுதீவாக விளங்கும் கார்டன் ஸ்டேற், பார்க்கவே மணல் பரப்பாக தோன்றலாம் எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

★ ★ ★

# கடல் மீன்களில் இருந்து அறுவைச் சிகிச்சை நூல்

கடல் மீன்களின் குடல்களில்இருந்து உயர்தர அறுவை சிகிச்சை நூல் தயாரிக்கும் செய்முறையை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

மீன்களின் குடல்களிலிருந்து 1 5 மீற்றர் நீளமுள்ள, வலுவான, தரமானறு அறுவை சிகிச்சை நூல் தயாரிக்க முடியுமென்று கொச்சினினுள்ள மீன்பிடி, தொழில்நுட்ட மத்திய நிலைய விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். அத்துடன் இந்நூல் அரிப்பையோ அல்லது ஒவ்வாமை காரணமாக பிரச்சினைகளையோ ஏற்படுத்துவதில்லை.

ஆனால், டை கார்போனைல் இரசாயனங்கள் பயன்படுத்தப்பட்ட பொழுது வலுவான நூல் கிடைத்ததாகவும் அறிவிக்கப்படுகின்றது.

புதிய தொழில் நுட்பத்தின்படி மீன் குடலின் உட்பொருள் அகற்றப்பட்டு, தண்ணீரினாலும் உப்புத்திரவத்தினாலும் கழுவப்படுகின்றது. பின்னர் அவை 'ஸஸ்பரிக் அமிலம்' சோடியம் குளோரைட் குரோமியம் உப்புசேர்ந்த ஒரு திரவத்தில் தொங்கவிடப்படுகின்றது. இதன்மூலம் கரையக் கூடிய புரதம் அகற்றப்பட்டு தூய்மையான கொலோஜன் இழை கிடைக்கின்றது.

டையா சிட்லுடன் குறுக்காக இணைக்கப்படுவதன் மூலம்கொலோஜன்இழைஇன்னும்வலுப்பெறுகின்றது. பின்னர் இரசாயன திரவ மேற்பூச்சு பூசப்படுகின்றது. 92 விகிதம் இஸோபிரபில் அல்கஹோல் என்ற திரவத்துடன் கூடிய காற்றுப் புகமுடியாத பொலித்தீன் பைகளில் இந்த அறுவை சிகிச்சை நூல் அடைக்கப்படுகின்றது.

அவள் இன்னமும் அழுது கொண்டு தானிருக்கின்றாள். எல்லோரும்ஏதோஒருமுடிவை வைத்து நீரினில்மூழ்கி நினைப்பொழிந்த நிலைக்கு வந்த பின்னும் அவள் அழுவதை நிறுத்தவில்லை இப்படி அவள்விழிகள் சதாகாலமும் அழுவதற்கென்றுதான் படைக்கப்பட்டதோ? ஒருகணம் தன்னை... தான் பிறந்த வீட்டை தன் சுற்றம் சகோதரர் தாய் தந்தை எல்லோரையுமே நினைப்பாள்.

மறுகணம்... தனக்கேற்பட்ட நிர்க்கதியை தன்குழந்தைகளை எண்ணி எண்ணி அழுவாள். தனிமை அவளை ஆட்கொள்ளும்போதிலெல்லாம்இப்படித் தான் அழுது துடிப்பாள். ஆற்றாத் துயரில் வீழ்ந்து வேகுவாள். யாராவது உறவினர்கள் பார்த்து விட்டால் போதும், அக்கணமே எல்லாவற்றையும் மறந்து சம்பிரதாயமாக அவர்களோடு பேசிக்கொள்வாள்.

''ராணிநடந்ததையேநெடுக நினைத்துக் கொண்டிருந்தால் இனி நடக்கப்போவதை யார் கவனிக்கப்போகிறார்கள். நீ இப்படியே அழுது கொண்டிருந்தால் உன்ரை குஞ்சுகளை என்ன செய்வது.ஏதோ ...தமிழனின் தலையெழுத்திற்கு நாயென்ன விதிவிலக்காக இருந்து விடவாமுடியும்?கண்களை மூடிக்கொண்டு காரியத்தைப் பார்க்க வேண்டியது தானே'' என்று மாமி மரகதத்தின்குரல் தினம்தினம் ராணியின்மனதில் எதிரொலித்துக்கொள்ளும் போது .. ஏதோ வானல் ஓடும் பாவை போல இயங்குவாள் எல்லோரும் படுக்கையில் புரளும்போது ராணிமட்டும் தனிமையில் தன் கல்யாணப் படத்தின் முன் இருந்து அழுது தீர்ப்பாள். இதுகடந்த இரண்டு வருடமாக அவளின் தினக் குறிப்பாக நடந்துவரும் ஒருநிகழ்வு.

ராணிக்கு மட்டுமா இந்த இழி நிலை...?

தமிழீழதேசமெங்கும் சிங்கள இனவாதத்திற்கெதிரான போராட்டம் நடந்து கொண்டே இருந்தது. அரச இயந்திரத்தை செலுத்தும் ஆட்சியாளரால் இப்போரை அடக்கிவிட முடியாது தவித்துக் கொண்டிருந்தனர்.

தமிழீழத்தின்ஒருபகுதி இராணுவ முகாம்கள் விடுதலைப் போராளிகளால் தகர்க்கப்பட்டு வெற்றிகொள்ளப்பட்ட நிலையில்... தப்பிஓடியசிப்பாய்களின் சிங்களச் சீற்றம் தென்தமிழீழத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டது. வனவேட்டைக்காரரும் வனவிலங்குகளும் போலத் தென்தமிழீழம் இனவாதப்படைகளால் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

நாளொரு கிராமம் செக்கிங் என்ற போர்வையில் கொள்ளையும் வன்முறையும் இன ஒழிப்புமாக நடை பெற்றுக் கொண்டே இருந்தது.

இந்தஇனவேட்டைக்குஅகதி முகாம்களுங்கூடத்தப்ப முடியவில்லை.

அண்மைக்கால வரலாறாக இது நடந்து கொண்டிருந்த வேளையில் தான் இதுவும் நடந்து முடிந்தது.

அந்தக் கொலனியிலும் செக்கிங் நடக்கப்போகும் செய்தி பரவலாக அடிபட்டுக் கொண்டிருந்தது.

''ராணி நாளைக்கு இஞ்சை தானாம் செக்கிங்'' என்றாள் பக்கத்து வீட்டுப் பார்வதம்.

''நேற்று இளமருதங்குளத்திலை செக்பண்ணப்போனவங்கள் நல்லமுத்தன்ரை மனுசியை ..மனுசி அறிவில்லாமல் கிடக்குதாம்''என்றாள் ஞானம்மா.

''ஏனடியம்மா இன்றைக்கு மருந்து குடிச்சுச் செத்த பெட்டை ஏன் செத்தது .... இவனுவ யாரைத்தான் விட்டாங்க ..''என்றாள் பார்வதம்.

சொல்லி மனுசியைப் பயப்படுத்தி போட்டுதுகள். பாவம் கொலனி வாழ்க்கையே ஒரு விதம் அதிலும் தனிமை. எண்ண ஓட்டங்களோடு வீடு வந்துசேர்ந்துவிட்டான் டானியல்.

ராணி... பாவம் தலை விரிகோலமாய் அவளால் என்ன செய்ய முடியும்.

''அம்மா .. அப்பாவைப் பிடிச்ச ஆமி வைச்சிருந்த மாதிரி எனக்கும் துவக்கு வாங்கித்தாறியா?''

# நாளை நமதே

''கடைசீலை உவரை கொழுத்திப்போட்டு பொடியளையெல்லாம் பிடிச்சுக் கொண்டு போட்டாங்களாம்.நாசமாய்ப் போனவங்கள்.. உவங்கள் நல்லா இருப்பாங்களோ?''வயிறெரிந்தவேக்காட்டுவார்த்தைகள் இவை.

இந்தக்கொடுமையின் கொடுமுடிகளைக் கேட்கக்கேட்க இராணியின் தலை சுற்றியது. அர்த்தமற்ற தெனச்சொல்ல முடியாதகற்பனைகளெல்லாம் மனத்தீச்சுவாலையாகக்கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. மூளாத்தீயாக அவளுள்ளத்தில் கனன்றுகொண்டிருந்த சுவாலையின் தாக்கம் அவளுடலையும் உள்ளத்தையும் வெகுவாகத்தாக்கிவிட்டதை அவள் முகம் துலாம்பரப்படுத்தியது.

மனித உடல் கூட ஒரு உலகம்தான்.அந்த உலகத்தில்முகிழ்த்தெழும் போராட்டங்களும் கிளர்ச்சிகளும், நியாயமான மாற்றங்கள் அனைத்துமேமுதலில் மனித உடலுக்குள் தானே நடைபெறுகிறது.உடலும் உள்ளமும் தீர்மானித்துப் பிரசவித்த சிந்தனைக் குழந்தை தானே உலகில் தன் மாற்றத்தைக் காட்டத்தொடங்கி விடுகிறது.

இந்தமாற்றங்களின் வெளிப்பாடுகளைத்தானே வெளி உலகப்போராட்டமாகக்காண்கின்றோம்.

ராணியின்மனதில் டானியல் தோன்றிச்சிரித்தான். அந்தச் சிரிப்பு...அர்த்தங்களை புரிந்து கொள்ள முடியாத ஒரு விதமாகத்தோன்றியது.

அந்தக் கொலனியில் நடைபெற்ற பெண்கள் சித்திரவதை இங்குமட்டும் நடக்காதா என்ன? அதுவும் தனக்கே அப்படி நடந்து விட்டால்.........

- வளவை வளவன் -

ஏக்கமே மூச்சாக விழித்திருந்த ராணிக்கு அவனைக் கண்டதும் புத்துணர்ச்சி ஒன்று தானாக அரும்பிக் கொலுவேறியது. இனிவிடிந்தாலும் பரவாயில்லை என அவள் எண்ணியவாறு படுக்கையில் சாய்ந்தாள்.

★ ★ ★

விடிந்ததும் விடியாத அதிகாலைப் பொழுது. ராணிஎழுந்து தேநீர் தயாரிக்கச் சென்று கொண்டாள்.

வீரிட்டுக் கதறிய சின்னப் பையனைத் தூக்கித் தோளில் போட்டவாறு வீட்டிற்குள்ளேயே உலவினான் டானியல்.

அந்நேரத்தில் தான் தொப் தொப் .. என்ற சப்பாத்து ஒலியோடு பத்துப் பதினைந்து இராணுவ வெறியர்கள் புகுந்தனர். எல்லாப் பக்கங்களையும் வந்தவர்களே நிரப்பிக் கொள்ள வேறு இரு இராணுவச் சிப்பாய்கள் வீட்டிற்குள் நுழைந்தனர்.

''அப்பாவைப் பிடிச்சவனை நான் பிடிச்சு வாறனம்மா எனக்குத் துவக்கு வாங்கித்தா...''

இராணியின் மூத்த பிள்ளைகள் இப்படித்தான், கேட்டுக் கேட்டு இப்போது அவர்கள் உணர்வுகளுக்கு உயிர் கொடுக்கத் தெரிந்தவர்களாக வளர்ந்து நின்றனர்.

காலம் விரைவாக ஓடியது. திலீபனைக் காணவில்லை, திலீபன் . ஓ .. என் திலீபன் .. ராணி தேடிக்களைத்த நிலையில் படுக்கையில் சாய்ந்தாள்.

மரத்துப் போன அவள்உணர்வுகளோடு புகை படிந்த ஓவியமாகக் கிடந்தாள்.

திலீபன் சேர வேண்டிய இடத்தைச் சேர்ந்துவிட்டான்.

அம்மா... மாதம் ஒன்று சென்ற பின் திலீபன் வந்தான் அப்படியே வாரி அணைத்தாள் ராணி.

ஒரு கணம்தான் தாயின் கண்ணீரைத் துடைத்துக்

## சிறுகதை

''டேய் .. நீ . கொட்டியாவா? இப்படி ஒருவன் கேட்க, மற்றவன் ஆ ஆ பிள்ளையைக் குடுத்திட்டு வா'' என்றான்.

சத்தங்கேட்டு ஓடிவந்த ராணியிடம் பிள்ளையைக் குடுத்திட்டு அவர்களின் பின்னே சென்றான் டானியல். ராணி வாய்விட்டுக் கதறினாள். பின்னே ஓடினாள். ''ஐயா ஐயா ..'' அலறிஅலறி அவள் தன் கணவனின் கையைப்பற்றி இழுத்தாள்.

பாய்ந்து வந்தசிப்பாய் ஒருவன் ராணியை தள்ளிவிட்டு டானியலை முன்னே தள்ளிச் சென்றான்.

வீழ்ந்து கிடந்த ராணிதலையைத் தரையில் அடித்து அடித்துப் புலம்பினாள்.

அழுகுரல் மனிதர்களைத் தானே இரங்க வைக்கும் ஆனால் மனித வடிவத்தில் இருக்கும் வேறான உருவங்களை என்ன செய்யும்.

டானியல் போனவன் போனதுதான்.

நாட்கள் வாரங்களாயின டானியல் திரும்பவே இல்லை.

''முகம் கருகிய நிலையில் இருபது சடலங்கள் காட்டினுள்''

''தலைகளற்ற மனித உடல்கள் சில எரிக்கப்பட்டிருந்தன''

பத்திரிகைகளிலும் வாய்ச் சொல்லாகவும் செய்திகள் பிசுபிசுத்தன.

ராணியின் புன்னகையைப் பறித்து விட்டுக் கண்ணீரைக் கொடுத்த கயவர்கள் வேறுஎங்கோ தம் நாடகத்தை நடாத்தப் போய்விட்டனர். ஆனால்

கொண்ட திலீபன்.''அம்மா... அப்பாவை எந்த வெறி நாய்கள் வேட்டை யாடியதோ அந்த வெறிநாய்களால் எத்தனை அப்பாக்களை, எத்தனையெத்தனை அம்மாக்களை, சின்னஞ் சிறிசுகளை இழந்து விட்டது நம்பூமி இன்றில்லாவிட்டாலும் நாளை நம்கனவு பலிக்கத்தான் போகிறது பாருங்களேன்'' என்று தன் உணர்வுகளைக் கொட்டித் தீர்த்தான.

ராணியின் முகத்தில் துன்பத்திலும் ஒரு இன்பம் இழையோடி நின்றது மகனே! அவள் அவனை உச்சி மோந்தாள்.

விதைப்புக் காலமாகையால் டானியல் அடுத்தடுத்த கொலனிகளுக்கு தொழில் கருதி தன் டிராக்டரோடுசென்றிருந்தான் உழவு காலங்களில் இப்படிச் சென்று உழவு முடியும் போது திரும்புவது டானியலின் வழக்கமாகும். இம்முறையும் டானியல் உழவிற்காகச் சென்று ஒரு வாரம் தான் ஆகி இருந்தது.

டானியல் வருவதற்கு நாட்கள் பல ஆகும்.

நாளைக்கு செக்கிங் நடக்கப் போகுது...

ராணியின் மனதில் அச்சம் கூடுகட்டிக்கொண்டு விட்டது.

யார் மூலமோ செய்தி அனுப்பினாள்: இங்கே என்னால் தனியே இருக்க முடியாது. விடிவதற்கு முன் வந்து சேருங்கள்.

ராணியின் செய்தியோடு டானியல் புறப்பட்டுவிட்டான். இப்படி ஒருகாலமும் செய்தி அனுப்பாத ராணி இன்று இப்படி ..? டானியலின் மனதிலும் ஏதேதோ எண்ண அலைகள் எழுந்து கொள்ளத்தான் செய்தன இந்த நாசமறுப்பான்களின்ரை சேட்டையளை யாரோ

## வரலாற்று நாயகிகள்

கையில் வளையிலில்லை
காா் குழலில் முல்லை
யில்லை
சங்குக் கழுத்தில்
சதிராடும் சங்கிலியும்
தொங்கும் நிலையில்லை
தூயவளின்
கையில் சுடுகணையும்
கண்துஞ்சா செவ்விழியும்
தியாகப் பிளம்பாகி
தீயாய் எரியவென்று
வந்தவள் தான்
தமிழ் ஈழ
வரலாற்று நாயகிகள்

வன்னி
முருகேசு

## நம்பிக்கை

ஏய்! மதயானையே!
உன்
தும்பிக்கை பெரிதென்று
துள்ளிக் குதியாதே!
எங்கள்
நம்பிக்கையின் வலிமையின் முன்
உன் தும்பிக்கை
சிறு''தும்பி''+கைதான்!
உன் பாதங்களுக்குள்
மிதிபட்டழிய
நாமொன்றும்
கள்ளிச் செடிகளல்ல!
நாங்கள்
கண்ணி வெடிகள்!
ஆம்!
கண்ணி வெடிகள்!
எங்கள் வாழைக் குருத்துக்களை
இனியும்
வதைத்துச் சுவைக்கலாமென்று
வாயூற வேணடாம்!
எங்கள்
வாழைக் குட்டிகளும்
வாளை ஏந்தி நிற்கும்
உன்
வாலை ஒட்ட நறுக்கும்!
மத வெறி கொண்டலையும்
உன்
மதம் அடக்க
எம்மிடம் மார்க்க முண்டு!
அதர்மத்தை
அழிப்பதுதான்
எங்கள் தொண்டு!
எங்கள் தோப்புக்குள்
நீ
எந்த மூலையால்
நுழைய முயன்றாலும்
அங்கெல்லாம் உனக்குச்
சமாதிகளுண்டு!
சின்ன உருவங்களென்று
சிலிர்ப்புக் கொள்ளாதே!
இங்கே!
காத்திருப்பவை
கட்டெறும்புகள்!
உன்
தும்பிக்கைகளைத்
துளைத்துச் செல்லும்!
துட்டனே!
உன்னைத் துடிக்கக் கொல்லும்!
எங்கள்
நம்பிக்கை
நிச்சயம் வெல்லும்.

-நிலாதமிழின்தாசன்

# இன்னொரு துட்ட கெமுனுவின் வீழ்ச்சி

இரு பெரும் இரைச்சல்களிற்கிடையில்
துன்புறுகிறான்
குழந்தை கெமுனு,
ஒரு புறம் ஆர்ப்பரிக்கும் கடல்
மறு புறம் எரிச்சலூட்டும் தமிழர்

அவன் குறுகிப் படுக்கிறான்
எழு என ஆணையிடும்
இரைச்சல்களைக் கேட்கிறான்.
அவை, அவனது தாய் நிலத்திலிருந்து
கூச்சலிடும் அந்நியர்களை
விரட்டத் தூண்டுகின்றன.

ஒரு குழந்தையின்
குரூர மன இருளில்
புகைந்த அச்சத்திற்காக
எவ்வளவு அழிவு?
வாள்கள் மின்னுகின்றன.
குருதி பெருகுகிறது.

ஆங்கிலம் மூலம்:- டெரிக் டி சில்வா

''உங்களிற்கு ஒவ்வொரு முறையும் அதிர்ஷ்டம் வாய்க்க வேண்டியுள்ளது ஆனால் எங்களிற்கு ஒருமுறை அதிர்ஷ்டம்வாய்த்தாலே போதும்'' இபபடிச் சொன்னவர் ஒரு ஐரிஷ் விடுதலைப் போராளி. பிரிட்டிஷ் அரச பிரமுகர்களிற்கு எதிராக ஐரிஷ் விடுதலை இராணுவம் குண்டுத் தாக்குதல்களை நடாத்திக் கொண்டிருந்த காலத்தில் அவர் மேற்கண்டவாறு கூறியிருந்தார். மேஜர் ஜெனரல் டென்சில் கொபபேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரட்ன போன்றோரின் விவகாரத்திலும் இக்கூற்று பொருந்திவிட்டது. ஒபறேஷன் லிபறேஷனில் டென்சில் மயிரிழையில் உயிர் தப்பியதாகக் கூறப்படுகின்றது பலவேகய ஒன்றில் விஜய விமலரட்னாவும் இவ்விதம் உயிர் பிழைத்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் லைடன் தீவின் விளிம்பில் கண்ணாப் பற்றைகள் சிதறிக் காணப்படும் வெளியில் அதிர்ஷ்டம் இவர்களைக் கைவிட்டு விட்டது. இரு தளபதிகளும் உட்பட வடபிராந்திய யுத்த முனை இடைநிலைத் தளபதிகளுமாக மொத்தம் ஒன்பது உயர் அதிகாரிகளும் ஒரேவாகனத்தில் ஒன்றாகப் பயணம் செய்வது என்றுதீர்மானித்தது புலிகளைப் பொறுத்த வரை முன்னெப்பொழுதும் வாய்த்திராத அதிர்ஷ்டமாக அமைந்து விட்டது.

சிங்களவர்கள் டென்சில் கொப்பேகடுவை இன்னொரு துட்டகெமுனு என்று அழைக்கிறார்கள் அவரது இறுதி ஊர்வலத்தில்கலந்து கொண்ட துக்கித்த வயோதிபர் ஒருவர் ரூபவாகினி செய்தியாளர்களிடம் சொன்னார்: ''கொப்பேகடுவ சிங்கள இனத்துக்காக இறந்தார்'' ஒருசிங்கள இளைஞர்சொன்னார்: 'அவருடைய மரணத்தை நான் என்னுடைய மரணமாக உணர்கிறேன்'' கனத்தைமயானத்தில் இலங்கை கண்ணீர் வடிப்பது போல வரையப்பட்ட பெரிய பனர் கட்டப்பட்டிருந்தது.

இலங்கை இராணுவத்தின் வரலாற்றில் ஒரு தளபதி இவ்விதம் தனிமரியாதை, கணிப்பைப் பெற்றது இதுவே முதற்தடவை. டென்சிலின் எழுச்சிக் காலம் ஒபறேசன் லிபறேசனோடு ஆரம்பமாகியது. இரண்டாவது ஈழப் போர் அவரை இன்னொரு துட்டகெமுனுவாக உயர்த்தியது. குறிபபாக இரண்டாவது ஈழப்போரின் ஆரம்பத்தில், கிழக்கில், புலிகளின் பிடியிலிருந்து நகரங்களை விடுவிப்பதற்கான போரில், டென்சில் பொலநறுவவிலிருந்து மூவாயிரம் துருப்புக்களை மட்டக்களப்பை நோக்கி வழிநடத்திச் சென்றார். அங்கு நகரங்களில்இராணுவம் தனது பிடியைப் பலப்படுத்தியபோது டென்சில் ஒரு துட்டகெமுனுவாக உருவாகி விட்டிருந்தார். அப்பொழுதுதான் அரசியல்வாதிகளின் கண்களை அவர் உறுத்தத் தொடங்கினார். அதன் பின் அவர் வடக்கிற்கு மாற்றப்பட்டார். பத்திரிகைகளில் அவரைக் காண முடியவில்லை. ஒருராணுவத்தளபதி அரசியல்வாதிகளுக்கு எதிராக எழுச்சி பெறுவதை பிரேமதாசா அரசாங்கம் விரும்பியவில்லை என்று கொழும்பில் கூறப்பட்டது. சிங்களவர் சமூகத்தில் வேறெந்தத் தளபதியோ அல்லது அரசியல்வாதியோ பெற்றிராத செல்வாக்கு டென்சிலுக்கு மட்டும் எப்படிக் கிட்டியது?

முக்கிய காரணம் அவரது குடும்பப் பின்னணி அவர் ஒரு கண்டிச் சிங்களவர். உயர் சாதியினர் என்று கூறப்படும் கொயிகம சாதியைச் சேர்ந்தவர். கொப்பேகடுவ என்ற பெயர் ஏற்கனவே சிங்கள வாக்காளர்களுக்கு நன்கு தெரிந்த ஒரு பெயர். இவைகளோடு புலிகளுக்கு எதிரான போரில் டென்சில் காட்டிய வீரமும் சேர்ந்து அவரை ஒரு ஐதீகக் கதாபாத்திரமாக உருவாக்கிவிட்டது.

விழுந்த அடிகளால் துருப்புக்களின் மனோதிடம் சரிந்து போயுள்ளது. துருப்புக்களை உளவியல் ரீதியாக எழுச்சி பெறச் செய்வதற்கு ஒரு பெரிய வெற்றியை ஈட்டிக் காட்டவேண்டிய கட்டாயம் தளபதி சிசில் வைத்தியரட்னவிற்கு இருப்பதாகப் பார்வையாளர்கள் கூறுகிறார்கள் அத்தகைய கவர்ச்சியான வெற்றி அநேகமாக குடாநாட்டில் ஈட்டப்படும் வெற்றியாகவே இருக்க முடியும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். அவ்வாறெனில், டென்சில் யாழ்ப்பாணத்துக்கான சமரை ஆரம்பிக்க இருந்தாரா?

எனினும் வடக்கில் இதுவரை நாளும் ஈட்டப்பட்ட வெற்றிகள் அனைத்தையும் மங்கச் செய்து விடும். ஒரு தோல்வி இது வென்று விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். புதிதாகப் பதவியேற்றிருக்கும் தளபதிகளின் அநுபவங்களுக்கும் கொல்லப்பட்ட தளபதிகளின் அநுபவங்களுக்கும் இடையில் அதிர்ச்சியூட்டும் இடைவெளி இருக்கப் போகிறது. ஏற்கனவே டென்சில் அணியினரால் வகுக்கப்பட்ட திட்டங்கள் உண்டு. எனினும் புதிய தளபதிகள் தமது கன்னிச்சமரே ஒரு உயர் நிலைச் சமராக அமைவதை விரும்புவார்களா?

(துருப்புக்களின் உளவியலை கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு சமர், இருக்கிற மனோதிடத்தையும் சிதறடிப்பதாக அமைந்து விட்டால்?) அல்லது வடக்குப் போர்முனையில் அனுபவங்களைப் பெறுவதற்காக குடாநாட்டிற்கு வெளியில் பெரிய அளவில் அல்லது குடாநாட்டிற்குள் சிறிய அளவில் சமர்களை ஆரம்பிப்பார்களா?

அராலி வெளியில் சந்தடியின்றி வெடித்த ஒரு நிலக்கண்ணி யுத்தத்தின் கதியையே தீர்மானிப்பதாக அமைந்து விட்டதுபோல்தோன்றுகிறது சிங்கள உயர்குழாத்தின் உயிர் நிலையை வலியுண்டாகும் விதத்தில் இது தாக்கியுள்ளது. பிரதமர் விஜேதுங்க தளபதிகளின் மரணச்செய்தி தெரிவிக்கப்பட்டபோது ''இந்த உலகில் சிறிதுகாலமே தங்கியிருக்கும் நாம் ஏன் ஒருவர் மற்றவருடன் சண்டை போடுகிறோம். ஏன் ஒருவர் மற்றவரில் குறை காண்கிறோம்?'' என்று கேட்டிருக்கிறார். பிரதமர் ஒரு புலால் புசியாத வைதீக பௌத்தர் என்றே கூறப்படுகிறது. அசோகச் சக்கரவர்த்தி கலிங்கத்தில் சுமார் ஒரு லட்சம் பேரைக் கொன்றதன் பிறகு நிலையாமை தத்துவம் பற்றிச் சிந்தித்தது போல, பிரதமரும் அராலி வெளியில் தமது கெமுனுக்களைப் பலியிட்டதன் பின்னர் தத்துவம் பேசுகிறாரா?

ஜனாதிபதி பிரேமதாஸா இறந்த தளபதிகளைக் காவல் தெய்வங்கள் என்று வர்ணித்துள்ளார். சிங்களவர்களிடம் ஏற்கனவே காவல் தெய்வங்கள் பற்றிய ஐதீகம் ஒன்று உண்டு. இவ்வைதீகத்தின்படி 'தம்ம துவீபத்தை' அந்நியர்களிடமிருந்து பாதுகாப்பதற்காகப் புத்தபகவான் நான்கு காவல் தெய்வங்களை நியமித்ததாக சிங்களவர்கள் நம்புகிறார்கள். (இத்தெய்வங்கள் நான்கும் - விஷ்ணு, கண்ணகி, முருகன், ருத்திரன் - இந்துக்களிற்கும் தெய்வங்கள் என்பது குறிப்பிடத்தக்கது) மகாவம்ச காலத்திலிருந்து இவ்வைதீகத்தை அடையாளம் காணமுடியும் எனினும், குறிப்பாக சோழர்களின் படையெடுப்புக்களின் பின்னரே (கி.பி. பதினொன்று?) இவ்வைதீகம் திட்டவட்டமான வடிவத்தைப் பெற்றது என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள் ஜனாதிபதி எந்த அர்த்தத்தில காவல் தெய்வங்கள் என்று சொன்னாரோ தெரியவில்லை. ஆனால் 87 இல் இதே தளபதிகள் ஆரம்பித்த (இப்பொழுது நடைபெற இருந்தது போன்ற) ஒபறேஷன் லிபறேஷன் தான் இலங்கைத் தீவிற்குள் அந்நியர்களை வலிய அழைத்தது என்பதை ஜனாதிபதி மறந்து விட்டாரா?

## நிலாந்தன்

# செய்தி விமர்சனம்

## ஜே ஆர். இற்கு நரசிம்மராவ் வைத்த பொறி

இவ்வாரம் இந்தியாவில் இடம்பெற்ற ''வெள்ளையனே வெளியேறு'' இயக்கப் பொன் விழாவிற் கலந்து கொள்ள வருமாறு பி. வி நரசிம்மராவ் முன்னாள் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு அழைப்பு அனுப்பியிருந்தார்.

இந்த அழைப்புக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவமும், ஒரு அரசியல் முக்கியத்துவமும் உண்டு. தனது86 ஆவது வயதில் உடல் நிலை சரியாக இல்லாததன் காரணத்தால் தன்னைப் பிரயாணம் செய்ய வேண்டாமென வைத்தியர் கூறியதன் காரணத்தால்தான் விழாவிற் கலந்துகொள்ள முடியவில்லையென இந்தியப் பிரதமருக்கு ஜே. ஆர். பதிலனுப்பி வைத்தார்.

ஐம்பதாண்டுகள்பின்சென்று இன்றைய அரசியல் நிலையோடு இதனை இணைத்துப் பார்த்தால் இதன் அரசியல் பரிமாணம் துலாம்பரமாகத் துலங்கும்.

1942 ஆம் ஆண்டு ''வெள்ளையனேவெளியேறு'' இயக்கத்தை இந்திய தேசியக் காங்கிரஸ் பிரகடனப்படுத்தியது. அவ்வியக்கத்தில் இலங்கைத் தேசிய காங்கிரசையும் இந்திய தேசிய காங்கிரஸ்வாதிகள் அழைத்திருந்தனர் இதற்கு ஓர் முக்கிய காரணமும் ஓர் நோக்கமும் உண்டு.

1940 ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய காங்கிரசின் சார்பில் ஜே ஆர்.ஜெயவர்த்தனா இந்தியதேசிய காங்கிரஸ்செயலாளர் ஜவகர்லால் நேருவிற்கு ஒரு கடிதமெழுதியிருந்தார். அக்கடிதத்தில் இந்திய சமஷ்டி ஆட்சியமைப்பின் கீழ் இலங்கை ஒரு மாகாணமாக இணைய விரும்புகின்றதென்று தெரிவிக்கப்பட்டது. இது இந்திய தேசியவாதிகளுக்கு மகிழ்ச்சியூட்டிய விடயமாகும். இதன் காரணத்தால் 1942 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் இலங்கை தேசிய காங்கிரசும் இணைந்து கொள்ளலாயிற்று. இலங்கைத் தேசிய காங்கிரஸ் பிரதிநிதியாக ஜே. ஆர். ஜெயவர்த்தனா இவ் விழாவிற் கலந்து கொண்டார் அப்போது இவர் வெளிப்படுத்திய கருத்து இலங்கை இந்தியாவின் ஓர் அங்கமாக இணைய வேண்டுமென்பதுதான்.

இலங்கையை தனது அகண்ட கரப்பிடிக்குள் வைத்திருக்க விரும்பும் இந்தியா சுதந்திரத்தின் பின்னான காலகட்டத்தில் இருந்தே ஒருவகை முறுகல்நிலைக்கு முகம் கொடுக்க வேண்டியதாக இருந்தது. குறிப்பாக 80களின் முன்பகுதியில் ஒரு பெரும் கசப்பு நிலை தோன்றியது. இந்தக் கசப்பு நிலைக்குத் தலைமை தாங்கியவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனாதான். பிற்காலத்தில் இவர் இந்தியாவுடன் 87 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஒன்றை எழுதினராயினும் அதில் இராஜதந்திர இலக்குகள் ஜே. ஆருக்கு அதிகம்.

ஜே. ஆரைப் போன்ற ஒரு மூத்த அரசியல்வாதி நரசிம்மராவ். உள்நாட்டரசியலிலும் இலங்கை - இந்திய உறவிலும் நரசிம்மராவின் பழுத்த அனுபவமும் எதனையும் உட்புறம் பார்க்கும் அவரது பண்பும் ஜே. ஆரை இப் பொன் விழாவுக்கு அழைப்பனுப்பக் காரணமாயிருந்ததெனலாம். இவ்விழாவில் பங்கு பற்ற முடியாத அளவிற்கு ஜே ஆரின் உடல் நிலை சீர்கெட்டிருந்ததென்பது எவ்வளவு தூரம் உண்மையோ பொய்யோ என்பது ஒருபுறமிருக்க, இவ்விழாவில் அவர் பங்குபற்றியிருந்தால் அவரது முன் பின் முரண்பட்ட முரண்பாடுகளினால் அவருக்கு ஒருவகை சங்கடமும் சிலவேளை தலைகுனிவும் ஏற்பட வாய்ப்பிருந்திருக்கும் என்பதுடன் இலங்கை உட்பட்ட பரந்த இந்தியா பற்றிய ஒரு நினைவு மீட்கப்படுவது நரசிம்மராவுக்கு இராஜதந்திர ரீதியில் வெற்றியும் ஜே. ஆருக்கு இராஜதந்திர ரீதியில் தோல்வியுமாக அமைந்திருக்கும். ★

## கொப்பேகடுவவின் இறுதி ஆசை

கடந்த செவ்வாய்க்கிழமை கேகாலையில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கொப்பேகடுவவின் இறுதி ஆசை பற்றிய ஓர் கருத்தொன்றை வெளியிட்டார். அதன்படி தன்னை முதற் செவ்வாய்க்கிழமை சில அதிகாரிகள் சகிதம் வந்து சந்தித்த கொப்பேகடுவ யுத்தம் தொடர்வதைத் தான் விரும்பவில்லையெனவும், இதனால் தமிழர்களும், முஸ்லிம்களும் பெரும் இன்னல்படுவதாகவும் எனவே யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானத் தீர்வு கொண்டு வரப்பட வேண்டும் எனத் தன்னை வற்புறுத்தியதாகவும் அதற்குச் சான்றாகத் தமிழர்கள் படும் இன்னல்கள் பற்றிய ஒரு ஒளிப்பதிவு நாடாவைத் தன்னிடம் ஒப்படைத்துள்ளதாகவும் பிரேமதாசா கூறினார்.

தன் இனத்துக்காகவும் தேசிய ஐக்கியத்துக்காகவும் போரிட்ட தமது இரண்டாவது கெமுனு களத்தில் பலியாகி விட்ட துயரத்தோடிருந்த சிங்கள மக்கள் மத்தியில் அந்தக் கெமுனுவின் இறுதியாசை போர் நிறுத்தமும், சமாதானமும் தானெனப் பிரேமதாசா கூறியிருந்தமை ஓர் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பாகும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கொப்பேகடுவவின்

கொப்பேகடுவ உட்பட கொல்லப்பட்ட ஒன்பது அதிகாரிகளையும் காவல் தெய்வங்களென வர்ணித்த பிரேமதாச அந்தக் காவல் தெய்வங்களிற் 'தலையான தெய்வம்' ஆக இருந்த கொப்பேகடுவவின் இறுதி ஆசை யுத்தநிறுத்தமே என வெளிப்படையாகச் சொல்லியுள்ளார் என்று கூறலாம். பிரேமதாசாவின் இவ்விரு கூற்றிலும் ஒருபகுதியில் முன்னுக்குப் பின் முரண்பாடு உண்டு என்றும் அல்லது மறுவகையில் காவல் தெய்வங்கள் சமாதானத்தின் மூலமே இலங்கைத் தீவைப் பாதுகாக்கலாம் என்று அறிவித்துள்ளதாகவும் எடுக்கலாம்.

பௌத்த சிங்கள அரசியல் போக்கானது சமாதானத்துக்குச் சாதகமானதாக உண்டென்று எண்ணுவது கடினம். ஆனால் உயர் குழாத்தினரின் இந்தக் களப்பலி அவர்களைச் சிந்திக்கத் தூண்டியுள்ளதென்பதும் அதிகளவு உண்மை.

சாதாரணமான விவசாய, மீனவக் குடும்பங்களிலிருந்து அப்பாவி இளைஞர்கள் யுத்தகளத்திற் பலியாகும்போது அவற்றை வெறும் புள்ளிவிவர எண்கணிதமாகத்தான்சிங்கள உயர் குழாத்தினர் கருதி வந்தனர். உயர் குழாத்தினர் இந்த, ஒன்பது பேரினதும் மரணம் சிங்கள அரசியல் - இராணுவ - அறிவியல் உயர் குழாத்தினர் மத்தியில் பெரும் மனத் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதென்பதுண்மை.

இந்த மனத் தாக்கத்தின் மத்தியில் கொப்பேகடுவவின் இறுதியாசை பற்றிய பிரேமதாசாவின் அறிவிப்பு ஏதோ ஒரு வகையில் அரசியல் சிந்தனையைத் தூண்டவல்லதாகும். பிரேமதாசாவைப் பொறுத்தவரையில் பிரேமதாசாவிடம் கொப்பேகடுவ கையளித்த ஒளிப்பதிவுநாடாவைக் கொப்பேகடுவவின் அரசியல் உயிலாக ஆக்கிக் காட்ட அவர் முனைகிறார் எனத் தெரிகிறது.

ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர் தனது தலையிடிகளைப் போக்க தீர்வுகாண முயல்வது இயல்பு. இலங்கை இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காணமுடியாதென்றாலும் சமாதானத்தைப்பேசுவதுபிரேமதாசாவின் தவிர்க்கமுடியாத தேவையாகும். ஆயினும் எதிர்க்கட்சிகள் பிரச்சினைகளைக் கிளறி ஆட்சியாளனுக்குத் தலையிடி கொடுப்பதென்பது அவர்களின் தந்திரம்.

இந்த ஒன்பது அதிகாரிகளின் மரணத்தைத் தொடர்ந்து பிரேமதாசா பிரச்சினைகளைத் தீர்க்க தவறிவிட்டாரென்றும் அவர் பிரச்சினையைத்தீர்க்க வேண்டுமென்றும் எதிர்க்கட்சிகள் வற்புறுத்துவதுடன் லலீத், காமினி தலைமையிலான ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணி தீர்வையும் பாராளுமன்ற - ஜனாதிபதித் தேர்தல்களையும் உடனடியாகப் புதிதாக நடத்த வேண்டுமெனக் கோரியுள்ளனர். சு. க. தே. ஐ. ஐ மு. போன்ற எதிர்க்கட்சிகள் கூறும் ''தீர்வு'' என்ற பதத்தின் அர்த்தம் தமிழ் மக்களின் நியாயமான உரிமை என்பதல்ல.

எப்படியோ உயர் குழாத்தின் மரணம் இவர்களை எல்லாம் சிந்திக்க வைக்கின்றது என்பதைப் பார்க்கும் போது அப்பாவி அடிமட்ட சிங்கள இளைஞர்களின் உயிர்களை எல்லாம் கூசாமல் தமது நலன்களுக்காகப் பலியிடு[illegible] பணயம் வைக்கும் இவர்களது கீழ்த்தர மனோநிலையும் தெளிவாக வெளிப்படுகிறது.

★

## கிளிநொச்சி மாவட்ட கல்வி மேம்பாட்டு

### நம்பிக்கை நிதியம்

கிளிநொச்சி மாவட்டத்தில் உயர்தர வகுப்புக்களில் கற்பிப்பதற்கு தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பௌதிகவியல், உயிரியல் பட்டதாரிகளிடமிருந்து, அல்லது இப்பாட நெறிகளுக்கான இறுதிப்பரீட்சைக்குத்தோற்றிப் பெறுபேறுகளை எதிர்பார்ப்பவர்களிடமிருந்து உடனடியாக விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

02. விண்ணப்பங்கள் 24-08-1992 திங்கட்கிழமை பி.ப 4.00 மணிக்கு முன்னதாக ''அரசாங்க அதிபர், மாவட்டச்செயலகம் கிளிநொச்சி'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது புற மேற்புறத்தில் ''நியதி ஆசிரியர்களுக்கான விண்ணப்பம்'' என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

03. நேர்முகப்பரீட்சை பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். வேதனம் பேசித்தீர்த்துக்கொள்ளப்படும்.


— நன்றி —

திரு. க. பொன்னம்பலம்.
நிதியத்தின் தலைவரும்,
அரசாங்க அதிபரும்

மாவட்டச்செயலகம்,
கிளிநொச்சி.
07-08-1992

(சி-4881)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
11 .8-74
வீரச்சாவு
27-07 91

### லெப். வினோத்

(தர்மலிங்கம் – தயாளன்)

திதி: 14–08–92 ஆடி அபரபிரதமை

திக்கத்தில் மலர்ந்த தயாளனே
ஆனையிறவில் மடிந்த வினோத்தே
லெப்டினன்ட் பெயருடன் மாவீரனானாய்
எங்களை மீளாத்துயரில் ஆழ்த்தினாய்
உன் பிரிவால் நிதமும் வாடுகின்றோம்

ஆண்டிதோட்டம்,
திக்கம்
அல்வாய்

அப்பம்மா, பெரியப்பா,
குடும்பத்தினர்

(3002)

## சுதேசி

'சுதேசி' என்பது நம்முள் இருக்கும் ஓர் உணர்ச்சி தொலைவில் இருப்பதை விலக்கி விட்டு, நம்மை ஒட்டிச் சுற்றிலுமிருப்பவைகளை உபயோகித்துக் கொள்பவர்களாகவும் அவற்றிற்குச் சேவை செய்பவர்களாகவும், நம்மை அந்தஉணர்ச்சிகட்டுப்படுத்துகிறது

- மகாத்மா காந்தி

## A/L 93

P PIR CL SS

12 - 01 - விலங்கியல்
01 - 02 - இரசாயனவியல்
02 - 03 - பௌதிகவியல்
03 - 04 - தாவரவியல்

ஆரம்பம் :
16 - 08 - 1992
(ஞாயிறு நண்பகல் 12,00மணிக்கு)

எமது வழமையான ஆசிரியர் குழுவினால்

NEW MASTER INSTITUTE
B. M. C. Lane,
JAFFNA..

(சி 4886)

## அறிவித்தல்

### யாழ்செயலகப்புனர்வாழ்வு, புனரமைப்புப்பிரிவு கூறுவிலைகோரல்

அத்தியாவசிய சேவைகள் நாயகத்தினால் கடந்த இரு வருடங்களாக அனுப்பப்பட்ட பொருட்களில் மனித உணவுப்பாவனைக்கு உதவாத பழுதடைந்த, கூட்டிச் சேகரிக்கப்பட்ட (Sweeping) மேற்குறித்த பொருள்கள் விற்பனை செய்வதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு வகைப் பொருள்களையும் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் அதற்கு தாம் உத்தேசமாக ஒரு கிலோவிற்கு / ஒரு பக்கற்றுக்கு செலுத்த விரும்பும் விலைகளை அலுவலகத்தில் உள்ள படிவத்தினைப்பெற்று 23-08-1992 ஆம் திகதியோ அன்றேல் அதற்கு முன்னரோ கூறுவிலை கோரல் மனுக்களை ஒப்படைக்கும் படி கேட்டுக் கொள்கின்றேன்.

பின்வரும் பொருட்களுக்கான கூறுவிலைகள் கோரப்பட்டுள்ளன.

1 பால்மா வகைகள் (அங்கர். கைலண்ட்)
2. அரிசி
3. மாவு
4. சீனி
5. பருப்புவகைகள்

மேலதிக விபரங்களுக்கு யாழ். புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தோடு தொடர்பு கொள்ளலாம்.

(சி/ 4884)

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு :
11 . 08 - 1938

இறப்பு :
14 . 08 · 1989

கிறிஸ்துவிற்குள்

### கிறிஸ்துதாஸ் கதிரேசு சிவகுரு

(வைத்திய ஆய்வுகூட ஆய்வாளர் M. L. T)

ஆண்டவருக்குள் மரித்தவர்கள்
இது முதல் பாக்கியவான்கள்

''மலரகம்''
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

அன்னாரின்
குடும்பத்தினர்,
உறவினர்.

(3016)

## 31-ம்நாள் நினைவஞ்சலி



வீரப் பிறப்பு
20 | 06 | 1976

வீரச் சாவு
15 | 07 | 1992

### 2-ம் லெப்டினன்ட் வெற்றிகொண்டான்

(கனிஸ்ரன் பேனாட்)

உயிரிற்கு உயிராய் நேசித்த உத்தமனே
அந்நியர் கொடூரத்தை அடக்கிட
துள்ளி விளையாடும் பள்ளிப் பருவத்திலே
வீரத் தமிழனாய் போர்க்களம் சென்றாய்
மணலாற்றினிலே உனது வீரச்சாவை
எய்தினாய்!
தமிழீழ விடிவிற்காய் உழைத்த மாவீரர்
வரிசையில் நீயும் ஒருவனடா
இதையிட்டு நாங்கள் பெருமையடைகின்றோம்.
உன் நெஞ்சில் கொண்ட இலட்சியம்
ஈடேறும் நாள் வெகு தூரமில்லை.

குருநகர்,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(3011)

# யாழ்ப்பாண சமர்; உடன் சாத்தியமாகுமா?

"விடுதலைப் புலிகள் தமது திட்டமிட்ட கரந்தடிப் போராட்ட யுத்திகளால்வெற்றிநடை போடுகின்றனர்'' இவ்வாறு கடந்த நான்காம் திகதி பி.பி.ஸி. தனது செய்தி விமர்சனத்தில் தெரிவித்தது. வவுனியாவில் விடுதலைப் புலிகளின் தாச்குதலுச்கு 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டபோதே பி.பி.ஸி. இவ்வாறு தெரிவித்தது.

பி.பி.ஸியின் இவ் விமர்சனத்திற்கு சிகரம் வைத்தால் போல் அமைந்தது, விடுதலைப் புலிகளின் விசேட வேவுப் பிரிவினர் ஊர்காவற்றுறை- அராலிச்சந்திக்குஅண்மையில் நடத்திய சண்ணிவெடித்தாக்குதல் ஆகும். இத்தாக்குதலில், சிறிலங்காவின் முன்னணித் தளபதிகள் மூவர்உட்பட 6சிரேஷ்ட அதிகாரிகள் கொல்லப்பட்டார்கள். இவர்களின் மரணம் சிறிலங்கா இராணுவம் தனது வரலாற்றில் சந்தித்திராத பேரிழப்புஆகும் இதேவேளை, விடுதலைப் புலிகளின் தாக்குதல் வரலாற்றில் என்றுமே கிடைக்காத வெற்றியாகவும் அமைந்தது.

அராலியில் நடந்த சண்ணிவெடிச் சம்பவம் அரசியல் இராணுவ வட்டாரங்களில் மிகவும் முக்கியத்துவம் பெற்றதாகக் கருதப்பட்ட யாழ் குடாநாட்டின் மீதான தாக்குதல் திட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியது. வடமாகாணத்திற்குரிய முக்கிய தளபதிகளும் குடாநாட்டின் மீதான தாக்குதலின் சூத்திரதாரிகளும் கொல்லப்பட்டமையே இக்குழப்பத்திற்கு காரணமாகியது.

## இறுதித்தாக்குதல் திட்டம்

தற்பொழுது கிடைத்துவரும் தகவல்களின் படி யாழ் குடாநாட்டின் மீதான தாக்குதல் இவ்வாரத்தில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்தது என்பது தெளிவாகத் தெரியவருகின்றது. அராலியில் கொல்லப்பட்ட இராணுவ கடற்படை உயர் அதிகாரிகள், தாக்குதல் திட்டத்தின்இறுதிக்கட்ட நடவடிக்கையாகதள நிலவரங்களை நேரடியாகப் பார்வையிட்டுத் திருபபிய போதே கொல்லப்பட்டுள்ளனர்.

யாழ்.குடா நாட்டின் மேற்குக்கரையோரத்தின் தள நிலவரங்கள், அதாவது யாழ் நகர் கரையோரத்தில் இருந்து, திருவடி நிலை ஈறாகவுள்ள கரையோரப்பகுதியை, தீவகப்பகுதியின் கிழக்குக் கரையோரப்பகுதியில் இருந்து தளபதிகள் நேரடியாகக்கண்காணித்து, படைகளுக்கு களத்தில் தலைமை தாங்கிச்செல்லும் தமக்கு அடுத்த நிலை அதிகாரிகளிடம்விளக்கிக்கூறுவதாகவும் அவர்களின் இப் பயணத்தின் நோக்கம் அமைந்திருந்தது.

ஒப்பரேஷன் பலவேகய II எதிர்பார்த்த குறிக்கோளை எட்ட முடியாத வேளையில், அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கை குறித்து இராணுவ வட்டாரங்களில் குழப்ப நிலை நிலவியது. யாழ் குடா நாட்டு முற்றுகையை மேலும் தீவிரப்படுததுவதா அன்றி யாழ். நகரம் மீதான இறுதித் தாக்குதலை நடத்துவதா என்பதில் இராணுவ தரப்பினர் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டதாயினும், இறுதியில் யாழ்ப்பாணம் மீதான தாக்குதலை நடத்துவதாகவே முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

அதேவேளை, போர்ஆரம்பித்தபின்னர் குடாக்கடல் நீரேரியை கடற்படை வ்சைப்படகுகளைக்கொண்டு முற்றுகையிடலாம் என சிறிலங்கா இராணுவத்தரப்புதிட்டமிட்டிருந்தது. இதனை சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் கேணல் முனசிங்காவும் தெரிவித்திருந்தார்.



"கிளாலிப் பாதையை படையினர் இன்னமும் மூடவில்லை கடற்படையினர் உரிய தருணத்தை எதிர்பார்த்திருக்கின்றார்கள்'' என அவர் தெரிவித்தார் அவர் உரிய நேரம் எனக் குறிப்பிட்டமை யாழ் குடா நாட்டின் இறுதித்தாக்குதலை தான் என்பதில் சந்தேகப்படத் தேவையில்லை.

இவ்வாறாக, இறுதிக் கட்டத்தாக்குதலுக்குத் தயாராகியிருந்த வேளையில் தான், இத்தாக்குதல்திட்டங்களுக்குப் பொறுப்பாக இருந்த உயர் இராணுவ, கடற்படை அதிகாரிகள் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகிக் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட ஆறு சிரேஷ்ட அதிகாரிகளில் வடமாகாண இராணுவ தளபதி மேஜர் ஜெனரல்டென்சில் கொப்பேகடுவவும் (இறந்தபின் லெப் - ஜெனரல்), பிரிகேடியர் விஜய்விமலரெட்னாவும் இறந்தபின் மேஜர் ஜெனரல்) மிகவும்முக்கிய மானவர்கள். இவர்களின் தரத்தில் சிறிலங்கா இராணுவத்தில் அதிகாரிகள் இருப்பினும், இவர்களின் இழப்பு யாழ். குடாநாடு மீதான இறுதித்தாக்குதலில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்பதை இராணுவத் தரப்பு ஏற்றுக் கொண்டுள்ளது. "இவ் இரு அதிகாரிகளும் இல்லாத வடபகுதி யுத்தம் எப்படி இருக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். கண்ணி வெடித்தாக்குதலில் கொல்லப்பட்ட இவ் உயர் அதிகாரிகளின் இடத்தை நிரப்பக்கூடிய அதிகாரிகள் சிறிலங்கா இராணுவத்தில் இல்லை'' என இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

### ஈழப்போரில் வளர்ந்தவர்கள்


லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ ஈழப்போரின் ஆரம்பத்தில் இருந்தே அறிமுகமானவர். ஈழபபோருடன் இணையாகவே உயர்ந்தவர் அதாவதுஈழப்போரினாலேயே வளர்ந்தவர் என்று கூடக்கூறலாம். வடபகுதியில் இடம் பெற்ற பெரும் சமர்களிலும் முச்கிய பங்காளியாக இருந்தவர். இதேபோன்றே மேஜர் ஜெனரல் விஜயவிமலரெட்னாவும் ஈழப்போரில் நீண்டகால பங்காற்றியவர். சிறிலங்கா இராணுவம் பெருமையாகப் பேசிக்கொள்ளும் ஒப்பரேசன் லிபரேசன் (1987) பலவேகய I (1991) பலவேகய II இவற்றுடன் மேலும் பல சமர்களில் இவ்விருவரும் நேரடியாகப்பங்கு கொண்டவர்கள். டென்சில் கொப்பேகடுவ வன்னிப் பகுதியிலும் பல தாக்குதலுக்கு தலைமை தாங்கியவர்.

இந்நிலையில், இவர்களின் இழபபானது சிறிலங்கா இராணுவத்தரப்பில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. சிறிலங்கா இராணு அமைப்பில் கடந்த மார்ச் மாதத்தில் கட்டுப்படுத்தும், கட்டளையிடும் அமைப்பில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு,முப்படை கூட்டு நடவடிக்கை தலைமையகத்திடம் இருந்து, முப்படைத் தளபதிகளிடம் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டன அப்போது,டென்சில்கொப்பேகடுவவின் அதிகார வரம்பைக் கட்டுப்படுத்துவதற்கும் விஜயவிமலரட்னாவை இடமாற்றம் செய்வதற்கும் ஆரம்பததில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பிரகாரம், டென்சில் கொப்பேகடுவவை வடமாகண ராணுவ தளபதி என்ற நிலையிலிருந்து மாற்றி யாழ் குடாநாட்டிற்கெனவும் பிரிகேடியர் விஜய விமலரெட்னாவை வடக்கில்இருந்துகிழக்கிற்கு மாற்றுவதற்கும் முயற்சி மேற் கொள்ளப்பட்ட வேளையிலும் இறுதி நேரத்தில் அது கைவிடபபட்டது. அதாவது வடக்குப்போர் முனைக்கு அவர்களின் அவசியம் உணரப்பட்டதினால் இறுதி நேரத்தில் இம் முயற்சி கைவிடப்பட்டது.

அத்தோடு இவ்விரு தளபதிகளுடன் ஒப்பிடக்கூடிய தரத்திலுள்ள சில அதிகாரிகள் இருப்பினும் போர்க்கள அனுபவம் உள்ள தளபதிகள் இருக்கின்றனரா என்றால் இல்லை என்றே கூறலாம். எடுத்துக்காட்டாக இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னா கூட இவர்களின் அளவிற்குக் கள நிலை அனுபவம் கொண்டவர் என்று கூறுவதற்கில்லை. இந்நிலையில், இத்தளபதிகளின் இழப்பு சிறிலங்கா இராணுவத் தரப்பிற்குப்பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையில்லை.

### தவறான கணிப்பீடு

சிறிலங்காவைப் பொறுத்து 'புகழ் பூத்த தளபதிகள்' ஆக இருந்து மறைந்த இவ்விரு தளபதிகள்கூட இதுவரை விடுதலைப் புலிகள் தொடர்பாக தவறான கணிப்பு ஒன்றைக் கொண்டிருந்தனர் என்பதே ஆச்சரியப்படத்தக்க ஒன்றாகும. "1991 ஆம் ஆண்டின் மத்தியில் இருந்து விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்திற்கு வெளியில் எநத விதத் தாக்குதலையும் தொடுககவில்லை.



அவர்களின் பலம் பற்றிய மாயை தகர்க்கப்பட்டு விட்டது'' என கடந்த யூலை மாதம் 'இந்தியா டுடே'க்கு அளித்த பேட்டியில் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தெரிவித்துள்ளார்.

இது அவரின் தவறான கணிப்பீடாகும். 1991 ஆனையிறவு முகாம்மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்பின் முகாம் தகர்ப்பு தாக்குதல் எதுவும் மேற்கொள்ளவில்லை என்பது கடந்த மாதம் 17ஆம் திகதி வரை (வண்ணாங்குளம் முகாம் தகர்க்கப்படும் வரை) சரியான தொன்றுதான். ஆனல், சிறிலங்கா இராணுவகதிற்கு பெரும் ஆடசேதத்தை ஏற்படுத்தியுள்ளதும், இராணுவ தளபாட இழப்பை ஏற்படுத்தியதுமான தாக்குதல்கள் கடந்த வருட இறுதியில் இருந்து தொடர்ந்து வருவதைக் கவனத்தில் கொள்ளாதது இராணுவம் கொண்டுள்ள மயக்கமான நிலையைக் காட்டுவதாகவே உள்ளது. இத் தவறான மதிப்பீட்டின் விளைவே அராலியில் கண்ணவெடியில் அவர் சிக்க வேண்டி ஏற்பட்டதற்கும் காரணமாகலாம்

வடபகுதியில் நீண்டகால அனுபவம்பெற்ற இத்தளபதிகளே விடுதலைப் புலிகளைப பற்றிய தவறான கணிப்புக் கொண்டுள்ள வேளையில், புதியதாக நியமனம் பெறும் தளபதிகளால் உடனடியாக புதிய திட்டம் ஒன்றின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மீதான தாக்குதலை மேற்கொள்ள முடியுமா? அல்லது பழைய திட்டத்தின் படி தாக்குதலை நடத்த முடியுமா? அதில் வெற்றிபெற முடியுமா?

அராலியில் சிறிலங்கா தளபதிகள் மரணமடைவதற்கு முன்பாகவே ஒரு இராணுவ வெற்றி சிறிலங்கா அரசாங்கத்திற்கு அவசியமதேவையாயிருந்தது. அதிலும் 'புகழ்பூத்த பதிகளின்' இழப்பைத் தொடர்ந்து பிரேமதாசா அரசாங்கத்திற்குஏற்பட்டுள்ள நெருக்கடிகளை தணிக்கவும். புலிகளின் தொடர்ச்சியான தாக்குதலினாலும், தளபதிகளின் இழப்பினாலும் மனோதிடம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் உள்ள இராணுவத்திறகுத் தென்பூட்டவும் ஒருபெரும் இராணுவ வெற்றி தற்பொழுது அவசியம் தேவையாகிறது ஆனால்,இவ் வெற்றி யாழ் குடாநாட்டில் ஈட்டப்பட வேண்டும் என்பதே முக்கியமானதாகும். ஏனெனில் இதற்கு அப்பால் ஈட்டப்படும்வெற்றி எதுவும்பெருமை பேசக்கூடிய நிலை இன்று இல்லை.

சிறிலங்கா இராணுவம் நடத்த வேண்டிய இந்த யாழ்ப்பாணச் சமர் இரணடாம் ஈழப்போரில் நடைபெற்ற ஆனையிறவுச் சமர் (பலவேகய I), மணலாற்றுச் சமர்கள், யாழ்ப்பாண முற்றுகைக்கான சமர் (பலவேகய II) ஆகியவற்றை விடச் சற்றும் குறைவானதாக இருக்கப்போவதில்லை. சில வேளை அவற்றைவிடக் கடுமையானதாகவும் இருக்கலாம் ஆனால், முன்னைய மேற்குறிப்பிட்ட பெரும் சமர்களுக்கு தலைமை தாங்கிய முக்கிய தளபதிகள் இருவரும் தற்பொழுது இல்லை.

இந்நிலையில் யாழ்ப்பாணம் மீதான தாக்குதலும், அதன் வெற்றியும் எந்தளவிற்குச் சாத்தியமானது என்பதே இன்றுள்ள கேள்வி. ஆனால், எது எவ்வாறு இருபபினும் சிறிலங்காஅரசாங்கத்திற்கும், இராணுவத்திற்கும் தேவையாக உள்ள உடனடியான பெருவெற்றி சற்றுக் கடினமானது என்றே கூறலாம்.

**-ஜெயராஜ்**

# கருணாநிதி மீது ஊழல் குற்றச்சாட்டு விசாரிக்க குழு அமைப்பு

திமுக. தலைவர் மு. கருணாநிதி மீதும், அவரது குடும்பத்தினர் மீதும் சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது

நேற்றுக்காலை சென்னையில் தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அரசு தெரிவித்துள்ளது.

கருணாநிதியும் அவரது குடும்பத்தினரும் மற்றும் சில ஐ ஏ எஸ் அதிகாரிகளும் பல் வேறு ஊழல்களில் ஈடுபட்டதாக தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ஏஸ். ராமமூர்த்தியால் தமிழக அரசிற்கு அனுப்பப்பட்ட விண்ணப்பம் ஆராயப்பட்டு இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இருப்பதாக தெரிய வந்ததால் விசாரணைக்குழுவிற்கு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி சிவசுப்பிரமணியம் இந்த விசாரணைக் குழுவின் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# கண்டியில் தமிழ்க்கடைகளில் பொருள்கள் கொள்ளை

(கண்டி)

கண்டிநகரிலிருந்துஎட்டுமைல் தொலைவிலுள்ள திகனை எனும் இடத்திலுள்ள தமிழர்களின் கடைகள் இரண்டு சூறையாடப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திகனையில் வெற்றிலை பாக்குக் கடை பூட்டப்பட்டிருந்த வேளையில் அதை உடைத்து அங்குள்ள பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன அதே போல மருந்தகம் ஒன்றும் சூறையாடப்பட்டது. அத்துடன் அங்கிருந்தபொருள்கள் அனைத்தும் வெளியே வீசப்பட்டுஎரிக்கப்பட்டுள்ளன

இது குறித்த விசாரணைகளை தெல்தெனிய பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர் என்று கூறப்படுகிறது

### புலிகளின்

னர் அதிகளவில் குவிக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் புலிகளின் தாக்குதலை எதிர்கொள்வதற்கே இந்நடவடிக்கை என்றும் சொல்லப்பட்டது

# மண்ணில் நேசம் கொண்ட மாவீரர்களை பூசிப்போம்

### வன்னி மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மனோ

மறுக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுத்திட மண்ணில் நேசம்கொண்டு, மக்கள்மீது பாசம் கொண்டு மடிந்த மாவீரர்களைப் பூசிக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவரையும் சார்ந்து நிற்கிறது. தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள் இம் மண்ணில் சாதாரண நிகழ்வுகள் அல்ல. அவை சரித்திரம் படைத்துள்ளன. சாதனைகள் புரிந்துள்ளன.

இவ்வாறு வவுனியா பனிச்ச நீராவியில் இடம் பெற்ற வெற்றிவிழா நிகழ்வின்போது உரையாற்றிய வன்னி மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மனோ உரையாற்றுகையில் தெரிவித்தார்.

வண்ணான்குள இராணுவ முகாம் தகர்ப்பு, 7ஆம், 8ஆம் மாதங்களில் சிறிலங்கா அரசிற்குச் சவாலாகவும், பேரிடியாகவும் அமைந்து, பலத்த சேதங்களையும் ஏற்படுத்திய விடுதலைப் புலிகளின் தாக்குதல்களையும் கௌரவிக்கும் முகமாகவும், இத்தாக்குதல்களில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களுக்குஅஞ்சலி செலுத்தும் முகமாகவும் இந்நிகழ்ச்சி இடம்பெற்றது.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்; சிறிலங்கா அரசு அரசியல் தீர்வு என்னும் போலியான நாடகத்தைநடத்துவதும், இராணுவத் தீர்வு மூலம் மக்களின் போராட்டத்தை அடக்கிவிடலாம் என கங்கணம் கட்டிச் செயல்படுவதனையும் நாம் நன்கு உணர்வோம். எத்தீர்வு ஆயினும் அதற்கு முகம் கொடுக்கவேண்டிய பொறுப்பு எமக்குண்டு.

எமது தலைவர் வழிநடத்தலில் போராடுவோம் அதன் மூலம் நிச்சயம் வெல்லுவோம் அதற்கு இந்தியப்படைகளுக்கு எதிரான போராட்டம் ஓர் உதாரணமாகத் திகழ்கின்றது எனத் தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சி நகரிலும் இவ்வாறான வெற்றி விழா நிகழ்ச்சிகள் இடம்பெற்றன

இந்நிகழ்ச்சிகளில் இத்தாக்குதல்களின்வெற்றியை கௌரவிக்கும் மங்கள விளக்கேற்றலும், மாவீரர்களின் ஞாபகார்த்தசுடர்களை அவர்களின் பெற்றோர்கள் ஏற்றலும் இடம்பெற்றன.

அத்துடன் விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர். மங்கள இசை, பாடசாலை மாணவர்களின்கவிதை பேச்சு, நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இராணுவ அச்சுறுத்தல் மத்தியிலும் இவ் விழாக்களில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது

---

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்கிளை, தலைமையகம்

## விசேட பொதுக் கூட்டத்துக்கான அறிவித்தல்

யாழ்கிளையின் மேற்படி விசேட பொதுக்கூட்டம் புதிய செயற்குழு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக எதிர்வரும் 13 - 09 - 92 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி யுபுளி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்கிளை செயற்குழு உறுப்பினர்கள் பதவிக்கான நியமனங்கள் 02 - 09 - 92 முதல் 04 - 09 - 92 பிற்பகல் 4.00 மணிவரை எமது பணிமனையில் ஏற்றுக் கொள்ளப்படும். இதற்கான படிவங்களை எமது பணிமனையில் ரூபா 10/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

நியமனப் பத்திரங்களை 06 - 09 - 92 பிற்பகல் 4.00 மணிவரை வாபஸ் பெற்றுக் கொள்ளலாம்

### பிரிவு வருடாந்தப் பொதுக் கூட்டம்

யாழ்கிளையின் ஒவ்வொரு பிரிவிலும் 30 - 08 - 92 ஆம் திகதி வருடாந்தப் பொதுக்கூட்டம் பின்னர் பத்திரிகையில் அறிவிக்கப்படும் இடங்களில் நடைபெறும். பிரிவுகளின் நியமனம் 19 - 08 - 92 முதல் 21 - 08 - 92 பிற்பகல் 4.00 மணிவரை அவ்வப் பிரிவுகளின் பணிமனையில் ஏற்றுக் கொள்ளப்படும். பிரிவுகளின் நியமனம் வாபஸ் 23 - 08 - 92 பிற்பகல் 4.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். பிரிவிற்கான நியமனப்பத்திரங்களை ரூபா 10/- செலுத்தி அவ்வப் பிரிவு பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு பிரிவிலும் 30-08-92 இல் நடைபெறும் வருடாந்த பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படும் பிரிவு செயற்குழு உறுப்பினர் பட்டியலும் ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப்படும் 30 கிளைக்குழு பிரதிநிதிகளின் முழுப்பெயர், அங்கத்துவ அட்டை இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் அடங்கிய பட்டியலை பிரிவில் தெரிவு செய்யப்படும் புதிய தலைவரின் சிபார்சுடன் புதிய பிரிவு செயலாளர் யாழ்கிளை இடைக்கால தலைவருக்கு 01 - 09 - 92 பிற்பகல் 4.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

### முக்கிய குறிப்பு

மேற்படி யாழ்கிளை பிரிவுகளின் தேர்தல் சம்பந்தமான விடயங்கள் பற்றி விளக்கம் கொடுப்பதற்காக யாழ்கிளையின் ஒவ்வொரு பிரிவின் தற்போதைய தலைவர், செயலாளர், உபதலைவர், பொருளாளர் அனைவரையும் தவறாது எமது பணிமனையில் நாளை 15 - 08 - 92 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 00 மணிக்கு நடைபெறும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
13 - 08 - 92.

ஏ. சி. செபநாயகம்
தலைவர்
(இடைக்கால நிர்வாகம்)

[சி-4889]

---

### அமைச்சர்கள

குதல்களைமேற் கொண்டனர்

இக்கலகத்தை அடக்க பொலிசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியதுடன் குண்டாந்தடிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பரவலான வன்முறைகளின்போது தனியார் பஸ் ஒன்றும் பல பொலிஸ் வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டதுடன் அரசிற்கு சொந்தமான பல கட்டடங்கள், பேரூந்துகள் கல் வீச்சுக்கு இலக்காகின. இச்சம்பவத்தின்போது கொழும்பு மேயர் ரட்ணசிறி ராஜபக்ச மற்றும்பல மாநகர சபை உறுப்பினர்களும் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மற்றும் ஆளும் கட்சியின் முக்கிய அமைச்சர்களான ரணில்விக்கிரமசிங்க, சிறிசேன கூரே ஆகியோரும் தாக்குதலுக்குள்ளாகினர். இவர்கள் உடனடியாக அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

### வடபிராந்திய

கிழக்குப் பிராந்திய தளபதியாக பிரிகேடியர் லக்கி அல்கமவும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் இவர் மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர் இப்போது கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகத்தில் இராணுவ நடவடிக்கைப் பிரிவு அதிகாரியாக கடமையாற்றுகிறார்.

### சான்றிதழ்கள்

பரீட்சைத் திணைக்களத்தால் அறிவிக்கப்படுகிறது ஆனால் சான்றிதழ்கள் வழங்கப்படுவதில்லை. தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு பெறுபேறுகள் பற்றி கம்பியூட்டர்களில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

பாடசாலை வாயிலாகபரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவ, மாணவியர்களின் பெறுபேறுகள் பாடசாலை அதிபர்களுக்கு மொத்தமாக அறிவிக்கப்படுகின்றன. அம்மாணவர்கள் பாடசாலை அதிபர்கள் வழங்கும் பெறுபேறுகள்அடங்கிய பாடசாலை சான்றிதழ்களையே பெறவேண்டி இருக்கிறது.

பரீட்சைகளுக்கு தோற்றும் பரீட்சார்த்திகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படாதது குறித்து ஆதர் வெதமுல்ல குறிப்பிடும் போது ''சான்றிதழ்கள் அச்சிடும் பாதுகாப்பு காகிதங்கள் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டின் காரணமாகவே சான்றிதழ்கள் வழங்க முடியாமல் இருக்கின்றன'' என்று தெரிவித்தார்.

---

## ஆங்கிலஉதவி ஆசிரியர்பதவி; விண்ணப்பங்கள் கோரல்

மாவட்ட ஆசிரிய சேவைத் திட்டத்தின்கீழ் சேவையாற்றுவதற்கு ஆங்கில உதவி ஆசிரியர்களைசேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அனைத்தும், பரீட்சை ஆணையாளரின் முகவரிக்கே அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும் போட்டிப் பரீட்சை மிக விரைவில் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

---

### இந்தியாவின்

நீதிபதி இம்மனுவை ஏற்றுக் கொண்டு விசாரணையை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இந்த வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டவர்கள் அனைவரும் வெளிநாடுகளில் வசிப்பவர்கள் ஆதலால் அவர்கள் முறையான எதிர்மனு தயாரிக்க காலஅவகாசம் தரும்வண்ணம் விசாரணையை ஆறு வாரகாலத்திற்கு ஒத்திவைக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

உலகமே இந்த வழக்கைப் பார்த்துக் கொண்டு இருக்கிறது என்று கூறிய கௌதம் அவர்கள் நீதித்துறையின் நம்பகத்தன்மை சோதனைக்குள்ளாகியுள்ளது என்றார்.

விசாரணை செய்யாமல் எவரையும் குற்றவாளி என முடிவு கட்ட வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

விடுதலைப் புலிகள் தமது மனுவில் தம்மை சிறிலங்கா அரசுடன் போரில் ஈடுபட்டிருக்கும் போராளிகள் என குறிப்பிட்டுள்ளது.

இந்த மனு சமர்ப்பிக்கப்பட்ட போது நீதிபதி, கௌதம் அவர்களைப் பார்த்து பிரதிவாதியின் வழக்கறிஞர் என்ற அந்தஸ்து இல்லாமல் சட்ட நடவடிக்கைகளில் பங்கு கொள்ள முடியாது என்று தெரிவித்தார்.

### புலிகள்

கொண்டது.

இந்த மனுவில் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு எதிராக தாம் ஒருபோதும் செயற்பட்டதில்லை என்றும், இலங்கையில் தமிழ் இனத்தின் விடுதலைக்காகவும், குறிப்பாகத் தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கு ஆயுதம் ஏந்தி இலங்கையில் போராடுவதே தமது நடைமுறைக் குறிக்கோள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், 1985 இல் இடம் பெற்ற திம்பு பேச்சுவார்த்தை மூலமும், 1987 இல் இந்திய-இலங்கைப் பேச்சுவார்த்தை மூலமும் இந்திய அரசு புலிகளின்ஆயுதப்போராட்டத்தை எற்கனவே அங்கீகரித்திருந்ததென்றும், லண்டனிலுள்ள புலிகள் செயலகம் இம் மனுவில் தெரியப்படுத்தியுள்ளது

மேலும் அந்த மனுவில், விடுதலைப் புலிகளைத் தடை செய்த பின்பு இந்தியாவில் சமூகவிரோத நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது. நாம் இந்தியாவில் இந்தக்காலத்தில் எந்தவித சமூகவிரோத செயல்களிலும் ஈடுபடவில்லை. இந்திய அரசு அவசரப்பட்டு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது என்றும்சுட்டிக்காட்டியுள்ளது

### சிங்களவரிடையே

ஆனால் இம்முறை ஒன்பது உயர் இராணுவ அதிகாரிகள் இறந்ததால் ஏற்பட்ட சீற்றத்தை மக்கள் அரசுமீது காட்கின்றனர். என்று தெரிவித்தது.

இந்த மரணங்களின் விளைவாக வடபகுதியில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கவிருந்த அடுத்தகட்ட இராணுவ நடவடிக்கை ஒத்திப்போடப்பட்டுள்ளது

புதிதாக நியமிக்கப்படும் அதிகாரிகளுடன்மக்கள்இறந்த அதிகாரிகளுடன் ஒப்பிட்டு பார்ப்பார்கள்

அரசியல் நிலையிலும் அரசுத் தலைவருக்குத் தீவிர நெருக்கடிகள், இறுதிச் சடங்குகளின்போது நிகழ்ந்த வன்முறைகளை நடத்தியவர்கள் ஜனாதிபதியின் அரசியல் எதிரிகளால் ஏற்பாடு செய்யப்பட்டவர்களாக இருக்கலாம். ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் தலைநகர் கொழும்பில் அரசுக்கெதிராக ஒரு வார்த்தைகூடக் கேட்கக் கூடியதாக இருக்கவில்லை என்பதை நினைவு கூரும்போது, இன்றைய நிலையில் எவ்வளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை மறக்க முடியாது.

இராணுவ நடவடிக்கையினால் இதோ வெற்றியை அண்மித்துக் கொண்டிருக்கின்றோம் என மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டுவந்த வேளையில் வட புலத்து இராணுவ தலைமைப்பீடம் முழுவதும் துடைக்கப்பட்டுவிட்டது என்ற செய்தி மக்களுக்குக் கிடைத்திருக்கிறது

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

### பொன்னையா ஸ்ரீபாலசிங்கம்

தோற்றம்: 26-07-1962
மறைவு : 28-08-1988
திதி : 14-08-1992

காளைவயதுக் கட்டழகுத் தோற்றமும்,
நாளை நிலையறியா நன் மழலை உள்ளமும்,
பாளைச் சிரிப்பும்; பண்பான வார்த்தைகளும்,
வேளை வரும் முன்பே வீணாகக் கழித்ததுவோ

மரணம் பொதுவேதான்
மறக்கவில்லை என்றாலும்
தருணம் இதுவலவே
தவிக்கின்றோம்,
துடிக்கின்றோம்

ஐயா, அம்மா,
அக்காமார், அண்ணாமார்,
அத்தான்மார், அண்ணிமார்,
பெறாமக்கள், மருமக்கள்

மாகியபிட்டி,
சண்டிலிப்பாய். [சி/4890]

---

## உள் வந்த, வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

13.08.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5243

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்;-
42-3239, 28-2511, 40-2829, 26-8419, 27-6579, 24-422
26-7829, 24-8714, 27-5775, 40-1188, 26-5576, 27-6652
22-6922

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.